
# ஆத்ம ஜோதி



ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 7 | ஜய௵ மார்கழிமீ 1-ந்வ (16-12-54) | சுடர் 2 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | தோத்திரம் | 33 |
| 2 | சுவாமி சித்பவானந்தர்......... | 34 |
| 3 | குரு குலக் கல்வி | 35 |
| 4 | நமது கல்வித் திட்டம் | 38 |
| 5 | உயர் தமிழ் முனிவன் வாழ்க | 39 |
| 6 | அறுவகைச் சமயத்......... | 41 |
| 7 | ஸ்ரீகேதார் பத்திரி யாத்திரை | 52 |
| 8 | திரு வருள் விலாசப்......... | 54 |
| 9 | நால்வகை யோகம் | 57 |
| 10 | திரி கரண சுத்தியோடு.......... | 60 |
| 11 | மனம் | 63 |
| 12 | செய்தித்திரட்டு | (அட்டை மூன்றும் பக்கம்) |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

*60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு*

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

*ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]*

# தோத்திரம்

## ஸ்ரீ ராம கிருஷ்ணர்

உண்மை அறிவு இன்பே உருவாய்
உலவிடும் எங்கள் குருதேவா!
வண்மைக் கோரளவில்லாய் ஞானம்
வாரி வழங்கிடும் குருதேவா!
பெண்மை தாயெனப் போற்றி வணங்கிடும்
பெம்மானே எம் குருதேவா!
இம்மைப் புகழும் மறுமைப் பயனும்
இனிதினளித்திடும் குருதேவா!

## ஸ்ரீ சாரதா தேவியார்

அனைத்துலகும் ஈன்றளித்து
அழிப்பதையோர் ஆட்டெனவே
நினைந்திடுமெம் அம்பிகையின்
திருவுருவே! நின்பலமே!
முனைப்பென்னும் இடியின்றி
கருணைமழை பொழிமுகிலே!
தினைத்துணையும் அசைவின்றி
துயர் போக்கும் தீந்தென்றல்!

## சுவாமி விவேகானந்தர்

இறைவனும் இராம கிருஷ்ணர்
இன்னருள் மைந்தர்க் கெல்லாம்
பொறையுடன் தலைமை தாங்கி
புவியுளோர்க் கொளியை வீசி
மறையெலாம் தொழுது வாழ்த்த
மாந்தருள் தேவனாகி
நிறைநிலை ஏற்ற நிமலன்
நீள்கழல் நினைந்து வாழ்வாம்.

### சுவாமி சித்பவானந்தர் அவர்களின்
குருதேவரான
### ஸ்ரீமத் சுவாமி சிவானந்தர் அவர்களின்
### (பரமஹம்ஸ தேவரின் நேர் சீடர்களுள் ஒருவர்)
# திருவாய் மொழிகள்.

குழந்தாய்! உள்ளுருகும் வகையை ஒருவராலும் பிறருக்குக் கற்றுக் கொடுக்க முடியாது. சரியான சமயத்தில் அது தானாகவே வந்து சேரும். எவ்வளவுக்கெவ்வளவு உள்ளத்தில் 'பகவானை இன்னும் அடையமுடியவில்லையே' என்ற எண்ணம் ஏக்கம் இருந்துவருமோ, அவ்வளவுக்கவ்வளவு உன் இருதயத்தில் உள்ளுருக்கமும் அதிகமாகி வரும். அவ்விதம் உண்டாகவில்லையென்றால் அதற்குரிய வேளை வரவில்லை என்று அறிந்து கொள். குழந்தைக்குப் பாலூட்டும் நேரங்களை அதன் தாய் அறிவாள். நேரம் சென்றே அதற்குப் பாலூட்ட வேண்டுமென்றிருந்தால் அவ்விதமே செய்வாள். அதன் காரணத்தையும் அவள் அறிவாள். பகவானே அன்னையாவார். அவரிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டு பாரம் அவருக்கென்று உன் தொழிலைச் செய்துவா,

பிரியத்தோடு அடிக்கடி நாமத்தைச் சொல்வதே ஜபமாகும். அப்படியே நீயும் செய். அவ்விதம் செய்து வந்தால் ஆனந்தம் அடைவாய் நடமாடி வரும்போதும், உண்ணும்போதும், படுத்திருக்கையிலும், கனவிலும் நனவிலுமாக எல்லாச்சமயங்களிலும் ஜபம் செய்து வரலாம், வேறு விசேஷமான முறை ஒன்றும் இதற்கு கிடையாது. ஆனால் அன்பு ஒன்றுதான் முக்கியம். எவ்வளவுக்கு எவ்வளவு அன்போடு அவர் நாமத்தை ஜபம் செய்வாயோ அவ்வளவுக்கு அவ்வளவு நீ ஆனந்தம் அடைவது திண்ணம். அவர், எல்லா இதயத்திலும் இருப்பவர். அவரே உயிர்களுக்கெல்லாம் உயிர். சந்திரன் வேண்டுமென்று தன் பெற்றோர்களிடம் பிடிவாதம் பிடித்து அழுமாப்போலே அவரையே நினைந்து, நினைந்து, உளம் நொந்து, கதறிக் கதறிஅழுது கண்ணீர் சொரிய அழைத்தால் கட்டாயம் அவர் உனக்குக் காட்சி கொடுப்பார்.

அன்னையோ அந்தர்யாமினி அவள் கவனத்திற் கொள்வதெல்லாம், எவ்வளவு நேரம் சாதனை செய்தாய் என்பதையல்ல, எத்தகைய உள்ளத்துடன் செய்தாய் என்பதைத்தான். உனக்கு அவளிடம் எவ்வளவு உள்ளன்பு உள்ளது என்பதையே அவள் நோக்குகின்றாள். எந்த நிலையில் இருந்தபொழுதிலும், நிறைந்த உள்ளத்துடன் பிரார்த்தனைபுரிவாயாக.

# குரு குலக் கல்வி

*(ஆசிரியர்)*

கல்வி முறையில் திருத்தங்கள் அவசியம் வேண்டுமென்றபேச்சும் எழுத்தும் நம்நாட்டிலும் நமது அயல் தேசமான தென்னுட்டிலும் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இருநாட்டிலும் சுதந்திர உணர்ச்சி, வேகமாக வீசத் தொடங்கியபின் அக்கிளர்ச்சி மும்முரமாகி, ஏழு ஆண்டுகளுக்கு முன் அரசியல் விடுதலை கிடைத்ததும் கல்வி முறையில் சில மாறுதல்களும் ஏற்பட்டுள்ளன. இத்திருத்தங்கள் பெரும்பாலும் மேல்வாரியாகவே, அடிப்படையைத் தீண்டாது, வந்துள்ளன. அக்காரணத்தினல் சில அம்சங்களில் கல்வி முறை முன்னிலும் பார்க்க பன்மடங்கு சீர் குன்றி விட்டதெனக் கூறுதல் மிகையாகாது.

(1) கல்வியின் நோக்கமென்ன? (2) சென்ற ஒன்றரை நூற்றுண்டு காலமாக அந்நியர் ஆட்சியின்கீழ் நடைமுறையிலிருந்து வந்த கல்வித் திட்டத்தின் லட்சியமென்ன? இந்த இரு கேள்விகட்குந் தக்கவிடை அளிக்கத் தகுதியற்ற தலைவர்கள் கையிற்சிக்கியே நாட்டின் கல்விமுறை அல்லல் படுகிறதென்று சுருக்கமாய்க் கூறிவிடலாம். அது மட்டோ! ஆசிரியர்களுட் பெரும்பாலோர் தமது புண்ணியத்தொண்டின் புனிதத்தன்மையை விளங்கும் பண்பற்ற வெறுஞ்சோற்றுத் துருத்திகளாய் விட்டனர். "குலனரு டெய்வங்கொள் கை மேன்மை .......... உலகிய லறிவோ டுயர்குண மினையவும்" என நன்னூல் தரும் ஆசிரியர் வரலாற்றைக் கேள்விப் படாதவர்கள் பலர். "கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்ற கேள்வியை எக்காரணம் பற்றி வள்ளுவர் பெருந்தகை கடவுள் வாழ்த்தின் இரண்டாவது குறளிலேயே அடக்கிவைத்துள்ளார் என்பதை விளங்காதவர் அநேகர். 'மாணுக்கர்' என்னும் சொல் குறிக்கும் விழுமிய கருத்தென்ன வென்பதே இன்றைய ஆசிரியர்களில் ஆயிரத்தில் ஒருவருக்குத்தானும் தெரியாது. தமது பின் வாழ்விற்கு நின்றுதவும் மாண் பொருளை ஆக்குதற்கு ஒழுக்க நெறி பேணிக் கல்வி பயில்பவர்களே மாணுக்கராவர் என்ற உண்மை அவர்களுக்கு அறிவுபுகட்ட முன்வரும் ஆசிரியர்கட்கு முதலில் கற்றுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இன்னோரன்ன பல குறைகளை நீக்கி, பழைய குருகுல கல்வி முறையை வாழ்வின் நவீன சூழ் நிலைக்குப் பொருந்த அமைக்க முயற்சி எடுத்தவர்கள் பலர் உளர், அவர்களுள், தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், இருவரின் நாமங்கள் முதன்மை பெறுகின்றன. ஒருவர் திரு. வா, தி. மாசிலாமணி முதலியார். வாலாஜாபாத் இந்துமத பாடசாலையினதும், அதன் சார்பிலுள்ள வள்ளலார் மாண வரில்லத்தினதும் திருவள்ளுவர் தொழிற்சாலையினதும் தாபகரும் தலைவரும் அவர். முப்பத்தெட்டு ஆண்டுகட்கு முன் பாலாற்றங்க ரையில் ஓர் சின்னஞ் சிறுகுடிசையில் ஐந்து பிள்ளைகளுடன் ஆரம் பித்த இக்குருகுலம் இன்று இந்தியா முழுவதினதும் கவனத்தை ஈர்த்து நிற்கின்றது. கல்வித்துறையில் உழைக்கும் சகலருக்கும் அது சென்ற ஐந்தாறு ஆண்டுகளாக ஓர் யாத்திரைத்தலமாகப் பெருமை பெற்றுள்ளது.

பெருமைக்கும் பாராட்டுதலுக்குமுரிய மற்றைய பெரியார் ஸ்ரீ சுவாமி சித்பவானந்தர் அவர்கள், திருப்பராய்த்துறையில் அகண் டகாவேரிக்கரையில் ஸ்ரீராம கிருஷ்ண தபோவனம் நிறுவியவர் அவரே, குருகுலமுறையில் சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி வழங்கி தியாகமும் தூய்மையும் வாய்க்கப் பெற்றுள்ளவர்களாக்கி அவர் களைப் பாரமார்த்திக வாழ்க்கைக்கும் சமூக சேவைக்கும் பயிலு வித் தலே தமது அருந்தொண்டாகக் கொண்டு அயராது உழைக்கின்றார் அவர். துறவுணர்ச்சி இயல்பாகவே பெற்றுள்ள அடிகள் 1923-ம் ஆண்டில் ஸ்ரீராம கிருஷ்ணமடத்தில் சேர்ந்தார். நான்கு ஆண்டுகள் கழித்து உதகமண்டலத்தில் ஸ்ரீராம கிருஷ்ண ஆசிரமத்தை ஆரம் பித்து, தொடர்ந்து பதினான்கு வருஷங்களாக அதின் தலைவர் பீடத் தில் அமர்ந்து அரும்பெரும் சேவை புரிந்தார். அடுத்த நான்கு வரு ஷங்களில் அவரது ஆத்மீகத்தொண்டு மைலாப்பூரிலிருந்து வெளி வரும் ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் என்னும் திங்கள் வெளியீட்டின் மூலம் தமிழ் நாடெங்கும் நிலவியது, அதின்ஆசிரியராகப் பணியாற் றியதோடு, பல நூல்களும் அக்காலத்தில் இயற்றியுள்ளார்,

ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த காரணத்தால், அச்சங்க அதிகாரிகளின் கட்டளைப்படியே அத்யாத்ம சேவை புரிந்து வந்த போதிலும், சித்பவானந்தர் அவர்களின் முக்கிய கவனம் நவீன

கல்விமுறையால் கற்றவர்கள் படுங்கஷ்டத்தைப்பற்றியே இருந்தது அவர்கள் சுதந்திரமற்று என்றென்றைக்கும் பிறர்க்கு அடிமைக ளாய் வாழ்வு நடத்தும் அப்படி அரசாங்கம், வர்த்தகம் முதலாய ஸ்தாபனங்களில் அடிமை உத்தியோகம் பெறமுடியாதவர்கள் வாழ் நாளெல்லாம் வீணேகழிப்பதும், திக்கற்ற கல்விமான்களாய்த் திண் டாடுவதும் அடிகளுக்குப் பிடிக்கவில்லை. தன்னம்பிக்கையளிக்கும் உடலைக் கொண்டு உழைக்கப் பின்வாங்காத, தியாக உணர்ச்சியு டன் பிறர்க்குப் பணிவிடைச் செய்யத்தூண்டும் குருகுலக் கல்வி முறையை நிறுவ வேண்டுமென்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் பொங்கி எழுந்தது. அவ்வித சேவையைச் செவ்வனே செய்து முடிக்க பூரண சுதந்திரம் தமக்கு இருக்க வேண்டு மென்பதை உணர்ந்து, அன்பானமுறையில் ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தினின் றும் விலகிக்கொண்டார். அப்படி விலகிய போதிலும், தமது குருபக்தி யின் சிறப்பை விளக்குமுறையில், திருப்பராய்த்துறையில் தம்மால் 1942-ம் ஆண்டில் நிறுவப்பெற்ற புதிய அறநிலையத்திற்கு 'ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவனம்' என்னும் பெயரையே சூட்டியுள்ளார். இத் தபோவனத்தின் சார்பில் நடைபெறும்குருகுலம் பதினொருவருஷ கால எல்லைக்குள் பெற்றுள்ள மதிப்பு அற்புதமானதாகும். பாடல் பெற்ற சிவஸ்தலத்துக்கருகில், சகலஇயற்கைவளமுஞ் செறிந்துள்ள காவேரிக்கரையில், குருகுலம் மிகவும் அழகான முறையில் கட்டப் பட்டுள்ளது. தென்னாட்டிற்கு யாத்திரை செய்பவர்கள் கட்டாய மாகச்சென்று தரிசிக்க வேண்டிய புதிய புண்ணிய க்ஷேத்திரமாக அது இன்று விளங்குகிறது.

சுவாமிகளின் சமயத்தொண்டு குருகுலச் சேவையுடன் நின்று விடவில்லை, பள்ளிக்கூட மாணவ மாணவிகளும், பாமரர்களும் விளங்கக்கூடிய எளிய இனிய நடையில் அநேகம் குறிஞ்சுவடிகள் எழுதி அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இந்து மத தெய்வதத்து வங்களெல்லாம் இரண்டு அணு அல்லது மூன்று அணுவுக்குக் கிடைக்கும், இச்சிறு நூல்களில் மிகவும் அழகாக புத்தம் புதிய முறையில், விளக்கப் பட்டுள்ளன. சிறிது ஓய்வு கிடைக்கும் சந்த ர்ப்பங்களிலெல்லாம், அடிகள் உதகமண்டலம், குற்றாலம், கோயம் பத்தூர். தூத்துக்குடி முதலாய இடங்கள் சென்று அந்தர்யோகம் அகமுகப்பட்ட அறநெறி வாழ்க்கை ஞான ஒடுக்கம் சத் சங்கம் மூன்றும் இணைந்த சாதனை — நடாத்துவது வழக்கம். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் இடையிடையேமூன்று நாளைக் காவது தங்கள் வியவகாரங்களை யெல்லாம் அடியோடு ஒதுக்கி வைத்துவிட்டு இரவும் பகலும் ஈசவரசிந்தனையிலேயே காலங்கழிக்க வேண்டும், அப்படிச் செய்வது அவர்களுக்குப் பெரும் நன்மையை விளைவிக்கும் " என்று ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் பகர்ந்த

# நமது கல்வித் திட்டம்

*[ சுவாமி சித்பவானந்தர் ]*

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது முதுமொழி அது முற்றிலும் மெய். ஆனால் உடல் படைத்துள்ள எல்லார்க்கும் அது மெய்யாகாது. நல்வாழ்விற்குரிய திருமேனி படைத்திருப்பவர்க்கு அது மெய். காமநோய் படைத்திருப்பவர்களுக்குக் கண் தீங்கு செய்யும். கொலைபுரிந்து களவாட எண்ணியிருப்பவனுக்குக் கண் கொடிய கருவியாகும். அத்தகைய கயவர்க்குக் கண்ணில்லாதிருப்பது நலம். நவீன மனிதனிடத்தும் பல கீழான பான்மைகள் பரவி வருகின்றன. அவைகளுள் முக்கியமானவற்றை கணக்கெடுக்கவேண்டும். அடக்கமின்மை, ஆணவம், வணங்காமை, சிறுநெறிசொல்லுதல், சோம்பல், உழைப்பின்மை, குற்றேவல் செய்யாமை, சுய நன்மையில்ஊறிக்கிடந்துபொதுநன்மையைக்கருத்தில் வாங்கிக்கொள்ளாமை, சமுதாய உணர்ச்சியின்மை, கட்டுப்பாடான வாழ்க்கை வாழாமை—இவைபோன்ற கேடுகளில் உழன்றுகிடப்பவர்க்கு ஏட்டுக்கல்வியானது மேலும் அதிகமான கேட்டை உண்டுபண்ணும்.

காமநோய் பிடித்திருப்பவனுக்குக் கண்ணைக்கெடுத்து விட வேண்டும் என்பதல்ல கோட்பாடு. அவனுடைய காமநோயைப் போக்க வேண்டும்; நல்லகண்ணையும் அவனுக்கு நல்கவேண்டும். இப்பொழுது படித்துக் கெட்டுப் போகிறவர்களுக்குப் படிப்பை நிறுத்திவிடவேண்டும். வெறுமனே எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் கற்றுக்கொண்டால் அது கல்வியாகாது. நல்வாழ்வு வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். பெரியாரை வணங்குதல் வேண்டும் உழைத்துப்பாடுபடுவது முற்றிலும் அவசியம். சமுதாயதுக்கு நல்ல தொண்டன் ஆக மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். ஒழுக்கத்தில் ஓங்குவதே மேலான கல்வி. இத்தனைவிதமான பண்புகளைப்பெறுவது முதற்கடமை. எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்ளுதல் அதற்கு அடுத்தபடியில் வருகிறது.

---

*முற்பக்கத்தொடர்ச்சி*

ருளியுள்ளார். அந்த அரிய உபதேசத்தை தமிழ்நாட்டில் ஒழுங்காக அனுஷ்டானத்திற்குக் கொணர்ந்த பெருமை சுவாமி சித்பவானந்தர் ஒருவருக்கே உரியதாகும். சென்ற ஐப்பசி மாசத்தில் அவரால் கதிர்காமத்தில் நடாத்தப்பெற்ற அந்தர்யோகத் தொடர்பிலேயே இம்மாச "ஆத்மஜோதி" அவரது படத்துடன் அவரது மணிமொழிகளால் அலங்கரிக்கப்பட்ட பக்கங்களுடன் அவர் மலராக காட்சியளிக்கின்றது. அவரது தமிழ்ப்பணியும் சமயத்தொண்டும் மேலும் மேலும் சிறப்புற்றோங்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

# உயர் தமிழ்முனிவன் வாழ்க!

பாரதப் பண்பனைத்தும்
பதிந்தொரு வடிவாய் வந்த
சாரதா—ராம கிருஷ்ணர்
தண்ணருட் பதத்தே னுண்டு,
வீரவி வேகா னந்த
வித்தகப் பண்மு ழக்கும்
பூரண ஞானி சித்ப
வானந்தர் பொற்றாள் போற்றி! [1]

உடலினை உகுத்த பின்பே,
உயர்தவம் புரிந்த மேலோர்
அடைகுவர் என்னும் கொள்கை
அற்றிட, ஆக்கை யோடே
திடமுடன் பற்றொன் றில்லாச்
சிந்தையும், அருளும், கொண்டு
அடலறு திருக்கை லாய
அற்புதம் கண்டு தந்தோன்! [2]

குமுறிடு நாத்தி கத்தைக்
கொன்றிருட் கடலில் ஆழ்த்தித்
தமிழக மெங்கும் ஆத்ம
சக்தியை வளர்க்க வென்றே,
அமிழ்தினும் இனிய, ராம
கிருஷ்ணரின் அருட்தேன் பொங்கிக்
கமழ், தபோ வனம் அமைத்த
கட்டிலாக் கருணைச் சித்தன்! [3]

பேரருட் பரம ஹம்ஸர்
பெருநெறிக் குடத்தில் சுத்த

---

*முற்பக்கத்தொடர்ச்சி*

சீரானவாழ்க்கை வாழத்தெரியாத நோய் இப்பொழுது நம்நாட்டில் பரவிவருகிறது. படிப்பில் மேலே போகுமளவு ஒருவன் முடவன் போன்று ஆய்விடுகிறான். உயிர்வாழ்க்கையைப் பற்றிய பிரச்சினையும் அவனுக்கு மிகப்பெரியதாய் விடுகிறது. சமுதாயத்திற்குத் தன்ஜீவிதம்எப்படிப்பயன்படப்போகிறது என்றஎண்ணம் அவனுக்குச் சிறிதளவுமில்லை, சமுதாயத்துடன் கூடிவாழவும் அவன் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை, ஒழுங்குப்பாடான நித்திய வாழ்க்கையில் நவீன இளைஞனுக்குச் சிறிதும் பயிற்சி ஏற்படுகிறதில்லை. தேசியப் பண்பாடு எதைப்பற்றிய உணர்ச்சியும் அவனுக்குக்கிடையாது தக்கமுயற்சியெடுத்துக்கொண்டு சமுதாயத்தையே மேலான பாங்கில் மாற்றியமைப்பது புதிய கல்வித்திட்டமாகும்.

வீரவி வேகா னந்த
விழுமிய ஆரம் கோத்த
நேர்படு தர்ம சக்க
ரத்தினல், தமிழ்நெஞ் செல்லாம்
பூரண வாழ்வு பொங்கிப்
பொலிந்திடச் செய்யும் பூமான்! [4]

மனைவி, நன் மக்கள், போக
வாழ்வெலாம் கடவு ளர்க்கேன்?'
எனும், பகுத் தறிஞர், கற்ருர்
கல்லாதார் எவரும் போற்றி
நனியுணர்ந் திட,நம் தெய்வ
தத்துவம் அனைத்தும், நன்கு
இனிதுற விளக்கிக் காட்டும்
இணையிலாத் தமிழ் நாவேந்தன்! [5]

எப்படி இயலு மென்று
அறிஞர்கள் வியந் திசைக்க,
அற்புத விரிவு ரைநூல்
கீதைக் கொன் றருளி, நாளும்
சொற்பொழி வனந்தம் ஆற் றிச்
செயல்பல தொடர்ந்(து) அதற்குள்
பற்பல நூல் படைத்துப்
பைந்தமிழ்க் களிக்கும் வள்ளல்! [6]

அன்பு,பே ரறி(வு), ஒ ழுக்கம்,
ஆண்மை, நற் பணி (வு), அடக்கம்,
திண்புய வலி, நம் பிக்கை,
செயல்திறன், ஆத்ம ஞானப்
பண்பெலாம் விளக்கும் கல்விப்
பயிர்தனைப், பார் வியக்க,
தெம்புடன் வளர்த்து நாட்டைச்
செழிப்புறுத் திடு நற் செம்மல்! [7]

உறுதியோ (டு) எளிமை பொங்கி
ஒளிவிடும் துறவு; தூய
திறமையோ (டு) ஓய்வில் லாத
செயற்கருந் தொண்டு; வற்ருு
அருவியாய்த் தெளிந்த செஞ்சொல்,
ஆழ்ந்தபே ரறி (வு) எல் லாம்சேர்ந்(து)
ஒருபெரு வடிவு கொண்ட
உயர்தமிழ் முனிவன் வாழ்க! [8]

''பரமஹம்ஸ தாஸன்,

# அறுவகைச்சமயத் தெய்வங்களின் விளக்கம்

*[இந்து மதம் என்னுங் கற்பக விருட்சத்தின் ஆறு முக்கிய கிளைகளாய் விளங்குவன: காணுபத்தியம், சைவம், சாக்தம், கௌமாரம் வைஷ்ணவம், சௌரம்-என்பன. எழுபத்திரண்டு சமயங்கள் இருந்து தம்முள் சமர்புரிந்து இழுக்குற்ற காலத்தில் இந்த ஆறையும் வகுத்து அவற்றின் தெய்வங்களுக்கு தோத்திரங்கள் பாடிய பெருமை பகவான் சங்கரரைச் சார்ந்ததாகும். அந்த ஆறு தெய்வங்களின் தத்துவங்களைப்பற்றி நவீன விஞ்ஞான சாஸ்திர ரீதியுடன் குழந்தைகளும் விளங்கும் முறையில் எளிய இனிய தமிழில் தருகின்றார் சித்பவானந்தர். அந்த விளக்கத்தின் சாரத்தை கீழே தருகின்றோம். விபரம் வேண்டுவோர் அவர் இயற்றிய நூல்களைப் பார்க்கவும். ஒவ்வொரு இந்துமத மாணவ மாணவியின் கையிலும் இருக்கவேண்டிய குறுஞ்சுவடி அவை.]*

## எல்லார்க்கும் பொதுவான கணபதி:

இந்தியாவில் தோன்றியுள்ள மதங்கள் அனைத்திற்கும் பொதுவாய் எழுந்தருளியிருக்கும் தெய்வம் கணபதி. இத்தெய்வத்தின் துணைகொண்டு தத்தம் தெய்வத்தை மக்கள் வணங்குகின்றனர், தெய்வவழிபாட்டுக்கு இடந்தராத புத்தமதத்திலும் கணபதிக்கு இடமுண்டு. பௌத்த தேவாலயங்களிற் சென்று பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். புத்தர் பெம்மானுடைய வடிவங்கள் வெவ்வேறு பாங்குகளில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவைகளுக்கிடையில் ஏதேனும் ஓர் இடத்தில் கணபதியின் வடிவத்தைக் காணலாம் ஜைனமதத்தினர் கணபதியை இன்னும் சிறப்பாகப் போற்றுகின்றனர். வேதத்தை அங்கீகரிக்கும் மதங்களுக்கு வைதிக மதங்கள் என்று பெயர். அவைகளுள் வைஷ்ணவம் ஒன்று. விஷ்ணு ஆலயத்திலுங்கணபதிக்குஇடம் இருக்கிறது. கர்ப்பகிரஹகத்துக்கு அண்மையில் உள்ள பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் தும்பிக்கையான் வீற்றிருப்பதை அங்குக் காணலாம். பிறகு சைவமதத்திலும் சக்தி மதத்திலும் கணேசன் சிறப்புற்று விளங்குகிறான். உமா மஹேசுவரனுக்கு யானை முகத்தவன் மூத்தமகன் ஆகிறான். இளையவன் குமரக்கடவுளோ கௌமார மதத்துக்கு முதல்வன். அவனுடைய வழிபாட்டிலும் கணபதி பூஜையே முன்னிற்கிறது. இவனை வழுத்

தியபின்பே மற்றவழிபாடுகள் ஆரம்பமாகின்றன. இந்த ஐதிகம் வடகயிலேயிலிருந்து தென் இலங்கை வரையில் வேரூன்றியிருப்பதை காணலாம்.

० ० ० ० ० ०

தோன்றுததும் மறையாததுமாகிய பொருளைத் தோன்றி வந்த தாகக் கருதுவது மாந்தரது போக்கு. பிறப்பையும் இறப்பையும் அறிகிற நாம் கடவுளையும் பிறக்கும்படி செய்து அதில் திருப்தி அடைகிறோம். கணபதிக்கு அத்தகைய தோற்றம் கற்பிக்கப்பட்டி ருக்கிறது, அதற்கேற்ற காரணத்தையும் புராணம் நமக்கெடுத் துப் புகட்டுகிறது. இயற்கையின் நடைமுறையில் ஒரு குறைபாடு இருக்கிறதாகத் தேவர்கள் கண்டறிந்தார்கள், வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் கோட்பாடே அக்குறைபாடு ஆகும். அசுரர்க ளும் ராக்ஷஸர்களும் வல்லமை மிகப் படைத்தவர்கள். அவர்கள் நல்லதையும் தீவிரமாகச் செய்யமுடியும். கெட்டதையும் அப்ப டியே செய்ய முடியும், மற்றவர்கள் செய்கிற நலத்துக்கு இடைஞ் சல் செய்யவும் அரக்கர்களுக்கு இயலுகிறது. இவ்வண்ணம் இயற் கையின் போக்கு அமைந்துவிட்டால் நல்லவர் முன்னேற்றம் அடைய முடியாது. தீமையே யாண்டும் தலையெடுத்துவிடும். உயிர் களின் வளர்ச்சிக்குப் பிரபஞ்சம் பயன்படாது பாழ்பட்டுப்போம். விக்கின ராஜா ஒருவன் தோன்றவேண்டும், நல்லியக்கங்களுக்கு விக்கினங்கள் எத்தனை வந்தாலும் இறுதியில் அத்தடைகளெல்லாம் தட்டழிந்து போய்விடும், தீயமுயற்சிகள் எவ்வளவுதான் ஆற்றல் படைத்திருந்தாலும் முடிவில் அம்முயற்சிகள் முட்டுக்கட்டைக ளில் மாட்டிக்கொள்ளவேண்டும். நலத்தை மீட்டுவிப்பதும் பொல த்தைப் பின் அணியில் தள்ளுவதும் ஒரு தெய்வத்தின் தனிச் செய லாகுக. அத்தெய்வத்துக்கு விக்கினேசுவரன் என்னும் பெயர் பா ரெங்கும் வழங்கும். இத்தகைய தெய்வத்தைத் தங்களுக்குத் தோற் றுவித்துத் தரவேண்டுமென்று தேவகணங்கள் ஒன்றுகூடி தேவ தேவனாகிய பரமேசுவரனிடம் பிரார்த்தித்தார்கள். கருணாகரனா கிய முக்கண் மூர்த்தியும் விண்ணவர் விண்ணப்பத்தை அங்கீகரித் தார். இயற்கையின் நடைமுறையில் நிச்சயமாகவே ஒழுங்குப் பாடு இருந்தாக வேண்டும், ஒழுங்குப்பாட்டை நிலையாக வைத்தி ருக்கும் நாயகன் ஒருவன் தேவை. அதன் பொருட்டுப் பரமசிவன்

பார்வதியின் உதவியை நாடினார், சிவசக்தியின் அருள்பிரசாதமாக ஆனைமுகன் உருவெடுத்தான். அவன் விக்கினேசுவரனாக விளங்கினான். தடைகள் பல செய்யவும் தடைகளைத் தவிர்க்கவும் வல்லவன் அவன். இயற்கையின் நடைமுறையில் ஒழுங்குப்பாடு உண்டு அதற்கு இழுக்கு ஒன்றும் வந்துவிடாது. தாறுமாறான நிகழ்ச்சிகளுக்கு அதில் இடமில்லை. இங்ஙனம் கணபதியின் பிறப்பால் வந்துள்ள ஒழுங்குப்பாட்டை அறிந்த தேவர்களும் பெருமகிழ்வடைந்திருந்தனர். இயற்கையின் முறையைக் காப்பவன் கணபதி.

## திரிலோக குடும்பியாம் சிவன்

இந்திரியங்களின் துணைகொண்டு அறியப்படுவது உலகம். அந்தக் கரணமாகிய மனது, புறக்கரணங்களாகிய கண், செவி ஆகிய இவைகளிடத்து உண்டாகும் கேடுகட்கு ஏற்ப வெளியுலகம் கேடுடையதாகத் தென்படுகிறது. உண்மையில் உலகில் கேடு இல்லவே இல்லை. அவரவரிடத்துள்ள கேடுகளுக்கு ஒப்ப அது குற்றமுடையதாகக் காட்சி கொடுக்கிறது. தெளிந்த மனங்கொண்டு திண்ணிய கரணங்கள் கொண்டு காணுமிடத்து இதேஉலகம் சிவமயம் என்பது விளங்கும். கருவி கரணங்கள் ஒய்ந்த விடத்து எஞ்சியிருப்பது சுத்த சிவம். அப்பொருளைப் பல பெயரிட்டு சமயங்கள் கூறுகின்றன.

இவ்வுலகை உள்ளபடி காண்பவன் கடவுளைக் காண்கிறான். கடவுள் எத்தகையவர் என்று இயம்புவதன் மூலம் இவ்வுலக நடைமுறையே விளக்கப்படுகிறது. குடும்பிகளுள் அவர் பெருங் குடும்பி, குடித்தனமோ துரைத்தனமோ எனப்படுகிறது. உலகெல்லாம் அவர் குடும்பம். அதன் முறை பிறழாத நடையே அவரது ஆட்சி. சிதறுண்டையும் உலகம் அவரது ஆட்சிக்கு உட்பட்டு ஒன்று சேர்ந்திருக்கிறது, முரண்பாடுகளெல்லாம் அவரது ஆணையால் ஒழுங்குப்பாடு பெறுகின்றன. அவரது குடும்பத்தை ஓர் எல்லையில் அடக்கிவைத்துப் பார்த்தால் இவ்வுண்மைகள் நன்குவிளங்கும்,

திரிலோக குடும்பியாக இருக்கின்ற சிவன் பின்பு தியாகராஜனாகவும் இருக்கிறார். விஸ்வத்துக்கே நாதனாக இருப்பவர் அநாதையாக ஒன்றும் இல்லாதவரார்க, இரந்துண்பவராக, இருக்க இடமில்

லாதவராக இலங்குவது வியப்பன்றோ ! இவரைப் பெற்றெடுத்தவர் யாருமில்லை; ஆதலால் இவர் அநாதை. பிறவாத ஒருவர் யாருக்குப் பிள்ளையாவார்? இறைவனுக்குப் புறம்பாகப் பொருள் ஒன்றுமில்லை. அவருக்குத் தம்மைத் தவிர உடைமை ஒன்றுமில்லை, இடமே அவரிடத்து ஒடுங்கிவிடுகிறது. நிறைபொருள் எதைவிட்டு எங்கு இருக்கச் செல்லும்?

இனி அவர் இரந்து உண்பதில் பொருள் ஒன்று உண்டு. துறவியர் பிக்ஷை ஏற்பது யாசகர் பொருள் ஏற்பது போன்று அல்ல. வறுமையினால் வறியவன் ஐயப்பாடோடு ஐயம் ஏற்கிறான். சோம்பேறி உழைக்க அஞ்சிக் கெஞ்சி கஞ்சியாவது கிடைத்தால் போதுமென்று ஏற்று உண்கிறான். தியாகி உடல் அபிமானத்தையும் செல்வச் செருக்கையும் துறந்ததற்கு அறிகுறியாகத் தற்செயலாய்க் கிடைக்கும் உணவை ஆசையின்றி ஏற்று உடலில் உறையும் இறைவனுக்கு ஆகுதியாக அளிக்கிறான். சிவபெருமான் அம்பிகையிடத்திருந்து அன்னம் ஏற்கிறார். அதிலும் விசேஷமாக ஞானத்தையும் வைராக்கியத்தையும் பிக்ஷையாகப் பெறுகிறார். சக்தியிடத்திருந்து உலகத்தவர் போகத்தை ஏற்கின்றனர். சக்தியிடத்திருந்து துறவியர் யோகத்தைப் பெறுகின்றனர். துறவியர்க்கு வேந்தனாகிய தியாகராஜா பிக்ஷாடனராய் அம்பிகையிடம் வந்து அன்னத்தையும், ஞானவைராக்கியத்தையும் ஏற்கிறார். உடலைப் பேணுவது அன்னம். உயிரை ஓம்புவது ஞானவைராக்கியம். அதுவே வாழ்க்கையின் நோக்கம்.

## சக்தி தத்துவம்.

எங்கும் நிறை கடவுளைக்காண நமக்கு இயலாதிருப்பது ஏன் என்ற கேள்வியைச் சிலர் கிளப்புகின்றனர். தோற்றத்திலும் தோற்றத்திற்கு அப்பாலும் இருப்பவன் கடவுள் ஒருவனே, அவனைத் தான் நாம் சதா கண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் அவனை அங்கீகரிக்கின்றோமில்லை. கோணலான மனதைக் கருவியாகக் கொண்டு அவனைக் காணுதலே திரிவுபட்ட தோற்றத்திற்குக் காரணமாகும், இந்நிலைமையிலிருக்கும் நாம் ஒழுங்குபடுதற்கு சக்தி தத்துவமும் சக்தி உபாசனையும் பெரிதும் பயன் படும், சிவம் வேறு சக்திவேறு அன்று சிவம் என்பது மெய்ப்பொருள். முக்காலத்திலும் இது மாறாத அழியாத தன்மையுடையது. பிரியாது அதனி

டத்து நிலைத்துள்ள விபூதி அல்லது சம்பத்துக்குச் சக்தி என்று பெயர், ஒரு உதாரணத்தால் இதை நன்கு விளக்கலாம். பாலின டத்து வெண்மை நிறமிருக்கிறது; ரத்தினத்தில் ஒளியிருக்கிறது வெண்மையின் உதவியைக் கொண்டும், ஒளியின் உதவியைக்கொண் டும் பாலையும் இரத்தினத்தையும் நன்கு அறிகின்றோம், பாலினின்று வெண்மையைப் பிரிக்க முடியாது. ஆதலாலேதான் உமாமகேசுவ ரன் என்றும் லக்ஷ்மீ நாராயணன் என்றும் பரம்பொருளை அழைக் கின்றோம். உமை அல்லது லக்ஷ்மி என்கின்ற ஐசுவரியத்தையுடைய பரம புருஷன் என்று இப்பெயர்கள் பொருள் படுகின்றன,

அண்டங்கள் அனைத்தும் சிவ சக்தி மயமாயிருக்கின்றன. சிவம் என்பது சேதனம், அறிவுப் பொருள். சக்தி என்பது அசேதனம் ஜடப்பொருள், இவையிரண்டும் இணைபிரியாது உலகெங்கும் இயங் குகின்றன, மானுட அமைப்பை உதாரணமாக எடுத்துக் கொண் டால் அதன் மாட்டுச் சேதனமும் அசேதனமும் கலந்திருப்பதைக் காணலாம். உடல்அறிவில்லாதது, அசேதனம். ஆனால் அதன்மூலம் அறிவுசொரூபியாகிய ஆத்மா பிரகாசிக்கின்றது. இயற்கையிலேயே எத்திசை திரும்பிப் பார்த்தபோதிலும் இக்கூற்று நிரூபிக்கப்படுகின் றது. தீ எரிகிறது காற்றடிக்கிறது, மழை பெய்கிறது, பூமி சுழல்கி றது, பருவம் மாறுகிறது, அண்டங்கள்இயங்குகின்றன, உயிர் வாழ். வனதோன்றிமறைகின்றன; இவையனைத்திலும்சக்தியின்மூலம்சிவம் ஆனந்தத்தாண்டவம் ஆடுகிறது. சிவ—சக்தி, லக்ஷ்மி நாராயணன் ராதா—கிருஷ்ணன். சீதா - ராமன், புருஷன்—பிரகிருதி, இத்யாதி பெயரிட்டு அழைக்கப்படும் வஸ்து பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. மக்கள் அனைவரும் அதன் மயம்; அதைத்தான் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றனர், ஆனால் அவரவர் அறி வுக்கு ஏற்றவாறு அவர்கள் அதைப் பொருள்படுத்துகின்றனர்.

பிரபஞ்சம் முழுதும் மாயாசக்தியின் சொரூபம். மாயை என் னும் பதத்தை சூனியம் என்றும் மித்தை அல்லது பொய் என்றும் தப்பாகப் பொருள்படுத்துவார் சிலர் உண்டு, மாயாவாதம் என்னும் ஒரு சம்பிரதாயத்தைப் பற்றி மாறுபடும் அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. மித்தையாகிய இவ்வுலகம் முக்காலத்திலும் இல்லைவே இல்லையென்று வாதிப்பாரும், இதற்கு மாறாக இக்கூற்றைக் கண்டி ப்பாரும் ஆகிய இருபிரிவினர் உளர். ஆனால் மாயையை வெறும்

வாதமல்லவென்று அறிவது அவசியம் உலகத்தைப் பற்றிய உண்மையை விளக்குவது மாயை. யாண்டும் அழியாது நித்தியமாய் இருப்பது பரம்பொருள். அக்கினியில் உஷ்ணம் போன்று என்றும் பிரியாது இப்பரம் பொருளைச் சார்ந்திருக்கும் ஆற்றலுக்குச் சக்தி அல்லது மாயை என்று பெயர். இந்தச் சக்தியானது க்ஷணந்தோறும் சலித்துக் கொண்டிருக்கிறது, ஜகத் என்பதின் பொருள் மாறுபடுந் தன்மையுடையது என்பதாம், சதா அது உருமாறிக்கொண்டிருப்பதால் குறிப்பிட்ட ஒரு வடிவம் அல்லது ரூபம் நிலைத்ததன்று. ரூபம் திரிவு படும் போது அதன் பெயரும் மாறுகிறது. நாமரூபங்கள் தான் மித்தையே யொழிய ரூபங்களை எடுக்கவல்ல சக்தி மித்தை யன்று, அது சிவத்தைச் சார்ந்த திரு அல்லது விபூதியாம்.

## முன்மாதிரியாய் விளங்கும் முருகக் கடவுள்

ஜீவர்களுடைய தோற்றத்திற்கே முருகக்கடவுள் முன்மாதிரியாகின்றான், சரவணப் பொய்கையானது கருப்பைக்குச் சமானமானது அது முற்றிலும் சக்தி சொரூபம், சிவசேதனம் என்னும் பிந்து அதன் கண் நாட்டப்பெற்றது. அப்பொழுது பஞ்சேந்திரியங்களும் மனதும் ஒன்று பட்டுவிட்டன. உயிர்வகைகளுள் ஆறு அறிவோடு கூடியது மிக உயர்ந்தது, பரஞானம் அல்லது கடவுள் ஞானத்தைப் பெறுதற்கு ஆறு அறிவு உயிரே முற்றிலும் தகுந்தது. கண், காது, வாய்போன்ற ஒவ்வொரு இந்திரியமும் தனித்தனியே பயிற்சி பெறுகிறது. கார்த்திகைமாதர் ஆறு பேரிடம் ஆறுவடிவங்களில் இருந்து வளர்க்கப் பெறுவது என்பதன் பொருள் பஞ்சேந்திரியங்களும் மனதும் நல்ல பயிற்சி பெறுதலாம். உறங்கும் பொழுது எல்லா இந்திரியங்களும் மனதும் ஒடுங்கி விடுவதால் ஓர் உருவம் ஆய் விடுகிறது.

பௌதிக உலகம் பரம்பொருளின் ஸ்தூல தோற்றமாம் காரணவஸ்து காரியவஸ்து ஆகிய இரண்டும் வஸ்து என்று எடுத்துக் கொள்ளுமிடத்து ஒன்றேயாம். பரம்பொருளைக் காரண வஸ்து என்றும் பிரபஞ்சத்தைக் காரிய வஸ்து என்றும் வைத்துக்கொள்வோம், பரம்பொருள் ஷண்முகன் ஆனான், கார்த்திகை மகளிர் ஆறு பேர் அவனை போஷித்தார்கள், இது பரம்பொருளைப் பற்றிய வரலாறு. இனி பூதப்பொருளைப்பற்றி பௌதிக விஞ்ஞானிகள் என்ன சொல்

கின்றார்கள் என்று பார்ப்போம். ஒவ்வொரு பூதப்பொருளும் காரண நிலையில் புரடோன் என்றும் எலட்ரோன் என்றும் இரண்டு வடிவங்கள் எடுக்கிறது. அதைச் சுற்றிச் சுற்றி எலக்டோன் என்பன பல சுழல்கின்றன. அத்தகைய பூதப்பொருள்களுள் கரி என்பது ஒன்று. அதில் புரடோன் ஒன்றுஇருக்கிறது, எலக்டோன் ஆறு இருக்கின்றன. இந்த எலக்ட்ரோன் எண்ணிக்கையில் ஆறுக்கு அதிகமாய்ப் போய்விட்டாலும் உயிர் தத்துவத்தை விளக்கும் சக்தியை அது இழந்து விடுகிறது. கரியில் ஆறு எலக்ரோன் சேர்ந்திருந்து உயிர்த்தத்துவத்தை வளர்ப்பதில் இயற்கையின் நடைமுறையைப் பற்றியபேர் உண்மை ஏதாவது ஒன்று விளக்கப்பெறலாம். இது பௌதிக விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் பயன் இதற்கும் குமரன் ஆறு கார்த்திகை மாதர்களால் வளர்க்கப் பெற்றதுக்கும் உள்ள ஒற்றுமை கவனிக்கத்தக்கது.

ஆறுமுகமும் பன்னிரு தோளும் ஒரு மேனியும் உடையவனாக சரவணபவன் தோன்றியதில் பொருள்கள் பல புதைந்து கிடக்கின்றன. இயற்கையின் அமைப்பில் பல தலைகளுக்குத் தேவையில்லை. இரண்டு தலையுடன் ஏதாவது பிறந்தால் அது பிழைக்காது. ஆறு தலைகளுக்கு வேலை என்ன என்பது கேள்வி. பல கைகள் இருந்தால் அவைகளைப் பயன்படுத்தலாம்; பல தலைகளைப் பயன்படுத்த யாருக்கும் முடியாது. ஜீவர்களுள் மனிதனாகப் பிறந்தவனிடத்து உள்ள மகிமைகளெல்லாம் உருவெடுத்தவன் முருகன். உயர்ந்த தத்துவங்களை உருவகப்படுத்தி ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலையாகக் கருதப்படுகிறது, தலைபெறுகிற சிறப்பை வேறு எந்த அங்கமும் பெறமுடியாது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தின் வடிவத்தில் இயற்கை இருக்கிறது, இவ் ஐந்தின் வகை அறிதற்கு ஐம்பொறிகள் அமைந்துள்ளன, இதற்கெல்லாம் மேலாக எண்ணவும் உணரவும் வல்லது மனது. இவை ஆறும் ஆறுமுகங்களுக்கு ஒப்பானவை, முகம்போன்று இவை பாராட்டப்படவேண்டும். இறையாக இவைகளை வளர்க்குங்கால் ஒவ்வொன்றும் ஒருமுகத்துக்குச் சமானமானது.

## அரங்கநாதனின் அரவணைத்துயில்.

பரம புருஷன் கதாதரனாய் இருந்து உயிர்களை ஒருவிதத்தில் ஓம்புகிறான்; தாமரைக் கையனாய் இருந்து இன்னொருவிதத்தில் ஓம்

புகிறான், எந்த உயிரை எப்படி ஆயத்தப்படுத்துவது என்று பேரறிஞனாகிய கோவிந்தன் அறிகிறான், அசுரப் பாங்குடையவர்களை கதையால் அடித்துத் துன்புறுத்தி திருத்துகிறான், துன்பம் மக்களை எவ்வளவு தூரம் தூய்மைப்படுத்துகிறது என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. முன்னேற்றத்திற்கு துன்பம் உதவுவது போன்று இன்பம் உதவுவதில்லை, துன்பம் வழங்கும் வல்லியல்புக்குச் சின்னமாயிருப்பது கதை என்னும் ஆயுதம், அவன் நரசிம்ம மூர்த்தியாகுமிடத்து வல்லியல்பே வடிவெடுத்து விடுகிறான்.

மெல்லியல்பின் இனிமைக்குச் சின்னம் தாமரைப்பூ. அன்பர்களிடத்து அவன் இனிமையே வடிவெடுத்தவன் ஆய்விடுகிறான், பக்தர்களுக்கு அவனது வண்ணம் முழுதும் கமலம் போன்றது. அவன் யாண்டும் நல்லார்க்கினியவன், நலமுடையார்க்கு அவனே செல்வம்.

வல்லியல்பும் மெல்லியல்பும் ஒருங்கே அமையப்பெற்றிருப்பவனே உலகம் யாவையும் ஆள வல்லவன், அரங்கத்தில் நல்லாரும் உளர்; பொல்லாருமுளர். அரங்கநாதன் அவரவர்க்கு ஏற்ற முறைகளைக் கையாண்டு ஜகத்தின்மீது ஆட்சி செலுத்துகிறான் என்பதை அவன் கைகளிலுள்ள கதாயுதமும் கமலமும் காட்டுகின்றன.

அரங்கன் அரவணையில் துயிலுறுதலின் மகிமை இவையாவினும் மேலானது. சிற்றுயிர்களின் உறக்கம் போன்றதன்று அது. அறிதுயில் என்றும், தூங்காத தூக்கம் என்றும் நினைவில் சுழுத்தியென்றும், யோகநித்திரையென்றும் அது சிறப்பித்துக் கூறப்படுகிறது. உலகுக்கும் நமக்கும் தொடர்பற்ற நிலையைத் தூக்கமென்கிறோம். உலகத்தைப் பற்றிய உணர்ச்சி நமக்கு ஆங்கில்லை. அரங்கநாதன் அரங்கத்தில் சயனித்திருக்கிறான் என்றாலும் அவன் ஒருநாளும் அரங்கத்தைச் சார்ந்திருப்பவன் அல்லன், அரங்கம் அவனைச் சார்ந்திருக்கிறது, பார்வைக்கு கண்வளர்பவன் போன்று காணப்படுகிறான், நாம் விழித்திருக்கும் போது உலகுக்கு அடிமை. உறங்கும் போது உறக்கத்திற்கு அடிமை, அவன் ஒன்றுக்கும் அடிமையல்ல இதுவே அவன் உறக்கத்திற்கும் நம் உலகத்திற்கும் உள்ள வித்தியாசம். நமக்குத் தூக்கத்தில் எல்லாம் கார் இருள்; ஒன்றும்

புலப்படாத நிலைமை, அரங்கனுக்கோ எல்லாம் தெளிந்த நிலைமை: அகண்ட தேஜோமயம். அது என்ன என்று விளங்காத நமக்குப் பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமான் என்றால் ஒருவாறு விளங்குகிறது. நம்மைப்பற்றிய உணர்ச்சி நமக்கு உலகத்தில் இல்லாதது போன்று ஆகிவிடுகிறது. அவனோ ஆத்மவான், சதாயோகி, தன் பூரணப் பிரக்ஞையினின்று அணுவளவும் பிசகாதவன். கண் வளர்பவன் போன்று காணப்படுகிறான். உண்மையில் பேரறிவே வடிவெடுத்தவனாயிருக்கிறான். பரிபூரணப் பொருளாகிய அவனுடைய சந்நிதியில் உலகம் யாவும் தோன்றுதலும், நிலைபெறுதலும், நீங்குதலும் முடிவில்லாத விளையாட்டாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அரங்கத்தம்மானின் அதிசயமிதுவே.

அவனைச் சேவிக்க நாம் கற்றுக் கொண்டால் அவனை அடையலாம். நமது உடல் அவனுடை அரங்கம். சராசரம் அனைத்திலும் பள்ளிகொண்டுள்ள அவன் இதனுள்ளும் பள்ளிகொண்டிருக்கிறான் உடலை நம்முடையதாக்கி அவனைப் புறக்கணித்திருக்கிறோம். ஆகையால் உள்ளிருந்தும் இல்லாதவன் போன்று மறைந்திருக்கின்றான். காயத்தை அவனுக்கு உவந்த பெரிய கோயிலாக்கி, அவனுக்கே பணிவிடை செய்து அவனுக்கென்று வாழ்ந்திருந்தால் நமது மனது பாற்கடல் போன்று பொலிவு பெறும். யாண்டும் பரமன் பள்ளி கொண்டிருட்பதும் அங்கு யோகானுபூதியில் விளங்கும். பின்பு பாரகமெல்லாம்,பேரங்கமாய்ப் புலப்படும். பரமபதம் என்னும் பெருநிலம் அதுவே. அனைத்தும் நாராயண சொரூபம்.

## கண்கண்ட தெய்வம் சூரிய நாராயணன்

உலகிலுள்ள நூல்களில் மிகமிகப் பழையது ரிக்வேதம். மற்ற நூல்களெல்லாம் அதன்பின் தோன்றியவைகளாகும். இந்த ரிக்வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்குகிறது. பண்டைக்காலத்துப் பெரியோர்கள் இயற்கையை அன்புடன் வணங்கினார்கள். இயற்கை உயிரோட்டு இலங்குவது அவர்களுக்குத் தெளிவுபட விளங்கிற்று. இயற்கையுடன் நல்லிணக்கம் வைப்பதே அவர்களுக்கு சமய அனுஷ்டானம் ஆயிற்று. பூமி, நதி, காற்று மழை முதலியன தெய்வீக சக்தியுடன் அவர்களுக்குத் திகழ்ந்தன.

இத்தகைய இயற்கைப் பொருள்களுள் சூரியன் உயர்ந்ததொரு ஸ்தானம் பெற்று வருவானாயினன். அன்று முதல் இன்றுவரை சூரியனை பிரத்தியக்ஷ தெய்வமாகப் போற்றுவது நம் நாட்டுமக்களின் சமய அனுஷ்டானங்களுள் ஒன்றாகும், இயற்கையோடுவைத்துள்ள தெய்வீக இணக்கமே இயற்கைக்கு அப்பால் அவர்களுடைய ஞானக் காட்சி எட்டுதற்கு துணைபுரிந்தது. அத்தகைய ஞானக் கண்ணைப் பெற்றான பிறகு மெய்ப் பொருளைப் பற்றி அவர்கள் ஐயம் திரிபு அற முடிவு கட்டினார்கள். அதாவது உண்மையில் ஒரு பொருள் தான் இருக்கிறது. அப்பொருளை ஐம்பொறிகள் வாயிலாகவும் மனதின் வாயிலாகவும் அறியும் பொழுது அது இயற்கை என்றும் பெயர் பெறுகிறது. அந்த இயற்கையோடு தூய, இனிய இணக்கம் வைப்பதால் ஐம்பொறிகள் பண்படுகின்றன; மனது தெளிவு அடைகின்றது. பண்பட்ட இந்திரியங்களும் தெள்ளத் தெளிந்த மனதும் பிறகு ஞானக் கண்ணாக மாறிவிடுகின்றன. ஞானக்கண் கொண்டு பார்க்கின்ற பொருளும், பஞ்சேந்திரியங்கள் மூலமாக அறியும் பொருளும் வெவ்வேறானவைகள் அல்ல. ஒரே பொருள் இந்திரியங்களுக்குப் புலனாகும் பொழுது இயற்கை என்னும் பெயர் பெறுகிறது. ஞானக்கண் கொண்டு காணும் பொழுது தெய்வம் என்னும் பெயர் பெறுகிறது. ஆகவே தெய்வம் வேறு இயற்கை வேறு அல்ல.

இப்பொழுது நமது அமைப்பு இந்திரியங்களையும் மனதையும் கொண்டது. ஆதலால் இயற்கைதான் நமக்குப் புலப்படுகிறது. புலப்படுகின்ற இயற்கையை தெய்வமாகப் பாராட்டுவது முறை, ஏனென்றால் தெய்வந்தான் இந்த இயற்கையாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. இதைத் தெய்வமாகக் கருதும் அளவு நாம் பண்பாடு அடைகிறோம். மேலோராக மாறியமைவதற்கும் அதுவே உற்ற உபாயம். தோன்றியுள்ள இயற்கையில் சூரியனை தெய்வமாகக் கருதுவது மிகப்பொருத்தமானது, ஏனென்றால் சூரியன் இயற்கைப் பொருளாக இருப்பதற்கிடையில் பரம் பொருளின் தன்மையையெல்லாம் நமக்கு விளக்கிக்காட்டுவதற்கு இந்தச் சூரிய நாராயணனே மிகப்பொருத்தமானவன் ஆகின்றான். இவனுடைய அமைப்பைத்துணையாகக் கொண்டு நமக்கு விளங்காத பரம் பொருளை ஏக

தேசம் விளங்கும்படி செய்து கொள்ளலாம். சூரியனிடத்து என்னென்ன மகிமைகளை யெல்லாம் இப்பொழுது இருந்தபடி நாம் காணக் கூடுமோ அந்த மகிமைகள் யாவும் உண்மையில் பரம்பொருளிடத்து இருக்கின்றன. பரம்பொருளிடத்துள்ள மகிமையின் புறத்தோற்றம் என்றே சூரியப் பிரபாவத்தைப் பற்றிப் பகரலாம். மற்றத் தெய்வங்களை வணங்கும் பொழுது அவர்களைப் பற்றி மனதில் பாவிக்கின்றோம். மனதில் பாவிக்க இயலாதவர்களுக்கு விக்கிரக ஆராதனை இருக்கிறது. விக்கிரகங்கள் அல்லது சின்னங்கள் வாயிலாக தெய்வங்கள் வழுத்தப் படுகின்றன. மூலப் பொருளை ஞாபக மூட்டுவதற்குச் சின்னங்கள் அமைந்திருக்கின்றன. சின்னங்கள் தாமே மூலப் பொருள் ஆய்விட மாட்டா. சூரிய நாராயணனுடைய வழிபாட்டிலோ சின்னங்களுக்கு அவசிய மில்லை. கோயில் ஒன்று கட்டி வைப்ப தற்கும் அவசியமில்லை. கண் கூடாக சூரியநாராயணன் வானத்தில் தென்படுகிறான். காலையிலும் உச்சி வேளையிலும் மாலையிலும் அவனை நேரில் பார்த்து வணங்குவது ஐதிக மாக இருந்து வருகிறது. வணங்கவிரும்புகிறவர்களுக் கெல்லாம் அவன் நேரில் தென்படுவதால் அவனைக் கண்கண்ட தெய்வம் என்று பகர்வது பொருந்துகிறது.

# ஜோதீ வாழ்த்து

சுந்தரன் கடைக்க ணேக்கு
தூயவம் பிகையின் வாக்கு
வந்திடு மயிலோன் வேலின்
வளம்பெறுந் திவ்ய ஞானம்
தந்துல களித்தீ டேற்றும்
தகைமைசேர் ஆத்ம ஜோதி
சிந்தையி னிறைந்து வாழச்
சிவனருள் சுரக்க மாதோ

கா. க. க.

# ஸ்ரீ கேதார் பத்திரியாத்திரை.

## வியாசச்சட்டி.

ரிஷிகேஷிலிருந்து தேவப்பிரயாகைக்குச் செல்லும் வழியில் மிக அழகான ஒரு இடம் வியாசச்சட்டியாகும். அது மலைகளாற் சூழப்பட்டு அழகியதோர் காட்சியுடன் விளங்குகிறது. சிறு அருவிபோல் பாய்ந்து வந்த கங்கை இங்கு வெகு அழகாக அகன்று பாய்கிறது. இங்கு வியாசகங்கை என்ற கிளை நதி பெரிய கங்கையோடு சங்கமமாகின்றது. வேதங்களை நான்காக வகுத்தருளிய வியாசமுனிவரின் சிறிய கோயில் ஒன்று இங்கு உண்டு.

## தேவப்பிரயாக்.

தேவப்பிரயாக்கைச் சென்றடைந்த மோட்டார் பஸ் ஒரு மணித்தியாலம் ஆறுதல் எடுத்துப் புறப்படுவதுதான் வழக்கம். காலை 7½ மணிக்கு ரிஷிகேஷை விட்டுப் புறப்பட்ட பஸ் 11 மணியளவில் தேவப்பிரயாக்கைச் சேர்ந்தது. "பிரயாக்" என்றால் இரு ஆறுகள் சந்திக்கும் இடத்துக்குப் பெயர். பிரயாக் என்று முடிவுபெறும் இடங்களிலெல்லாம் கங்கையோடு வேறு கிளை நதிகள் வந்து கலப்பதைக் காணலாம்.

பாகீரதியோடு அலகநந்தா இவ்விடத்திற்சந்திக்கின்றது. ஸ்ரீராமபிரான் இராவணனைக்கொன்ற பாவந்தீர்வதற்காக இவ்விடத்தில் வந்து சிவபிரானைக் குறித்து வெகுகாலந் தவஞ்செய்ததாகக் கூறப்படுகிறது. தெய்வத்தன்மை பொருந்திய இவ்விருநதிகளும் கலக்குமிடத்தில் மக்கள் ஸ்நானம் செய்வதற்கு வசதியான இடமுண்டு. இதற்குச் சிறிது தூரத்தில் ஸ்ரீ இராமர் பூசித்ததாகச் சொல்லப்படும் சிவன் கோயில் உண்டு. இவ்விடத்தில் பாயும் ஆறுகள் மிகவேகமாக உருண்டடித்துக்கொண்டு வருவதனால் நீராடுபவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். கேதார்நாத், பத்திரிநாத் ஆகிய இரு இடங்களுக்கும் செல்லும் யாத்திரீகர்களுக்கு வேண்டிய வழிகாட்டிகளாகிய பண்டாக்கள் இங்கு இருக்கின்றனர். இங்கு ஒரு அழகான கடைவீதி உண்டு. அலகநந்தாவை ஒரு தூங்கு பாலத்தின் மூலம்

கடக்கலாம். தூரத்திலே தேவப்பிரயாக்கை நோக்கி பஸ்ஸில் வந்து கொண்டிருக்கும்போதே அந்த நகரத்தின் தோற்றம் மனத்திற்கு மிகவும் ரம்மியமான அழகைக்கொடுக்கின்றது. எங்கள் மோட்டார் பஸ் சரியாகப் பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டது. கீர்த்தி நகருக்கு 2 மணிவரை போய்ச்சேர்ந்தோம், அங்கிருந்து அரைமைல் தூரம் நடந்து ஸ்ரீநகர் செல்லும் மோட்டார் பஸ் எடுத்து மாலை 4 மணிக்குச் ஸ்ரீநகர் சென்று அடைந்தோம்.

## ஸ்ரீ நகர்

இது இமயத்தின் இருதயம் போன்றுள்ளது. ரிஷிகேஷிலிருந்து வடக்கே உள்ள நகரங்களுக்குள் இது பெரியதும் அழகுவாய்ந்ததுமாகும். எவ்வளவு உயரம் ஏறினேமோ அவ்வளவு இறக்கம் இறங்கி சமவெளியில் அமைந்துள்ள ஸ்ரீநகரை அடைந்தோம் இந்த ஒரு அழகான கோயில் உண்டு. அதன் பெயர் கமலேஸ்வர் என்பது. இங்குப்பரம்பரையாக ஸ்ரீமகாவிஷ்ணுவினுடையவும் சிவபெருமானுடையவுமான கதையொன்று வழங்குகின்றது. ஸ்ரீ இராமபிரான் பரமசிவனைப் பூஜித்து வந்தார். நாள் தோறும் 1000 தாமரைப் பூக்களைக் கொண்டு அர்ச்சனை செய்வது வழக்கம் ஒரு நாள் சிவபிரான் அவருடைய பக்தியை பரிசோதிக்க விரும்பி ஒரு தாமரைப்பூவைக் குறையச் செய்தார். ஸ்ரீ இராமபிரான் தமது பூஜையில் 999 தாமரைப் பூக்கள் மாத்திரம் அர்ச்சிக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஒரு பூ குறைந்து விட்டதே என்று மனம் மிக வாடி தமது திருநேத்திரங்களிலொன்றைப் பெயர்த்து சிவபிரானுக்கு அர்ச்சித்தார். அப்போது சிவபிரான் ஸ்ரீ இராமபிரானுக்கு அருள் சுரந்து எடுத்த கண்ணை மறுபடியும் கொடுத்தருளினார். அன்று தொடக்கம் சுவாமிக்கு கமலேஸ்வரர் என்ற பெயர் வழங்கி வருகின்றது.

ஸ்ரீநகரில் அன்று இரவு தங்கி அடுத்த நாட்காலை 5 மணிக்கு ருத்திரபிரயாக் பஸ்ஸில் பிரயாணமானேம். போகும் வழியில் தேவதாரு மரக்காடுகளை நிறையக்காணலாம், இக்காடுகள் கண்ணிற்கு அழகையும் மனதிற்கு அமைதியையும் அளிக்கவல்ல காட்சியுடையனவாயமைந்துள்ளன, இவ்விடங்களைப் பார்க்குந்தோறும் ஓரிடத்திலமர்ந்து தியானமோ ஜெபமோ செய்யத்தோன்றும். காலை 7-30 மணியளவில் ருத்திரப் பிரயாக் சென்று அடைந்தோம். ஸ்ரீநகரிலிருந்து ருத்திரபிரயாக் 20 மைல் தூரமாகும். (தொடரும்)

# திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்

தாயுமான சுவாமி பாடல்களுக்கு தலைப்புக்கள் பல இருக்கின்றன. அவைகளுள் முதல் தலைப்பு ஆராய்ச்சிக்குரியது. திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் என அது பெயர் பெறுகிறது. இத்தலைப்பின்கீழ் மூன்று பாடல்கள் அமைந்துள்ளன. இவைகளுள் அடங்கியுள்ள கோட்பாடு ஒன்றைச் சாதகர்கள் கவனிக்க வேண்டும். மேற்போக்காகப் பார்க்குமிடத்து மூன்று பாடல்களும் பரம்பொருள் வணக்கத்திற்குரியனவாகின்றன. சற்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் மற்றுமோர் உண்மை வெளியாகிறது. மஹாவாக்கியத்திற்கு விளக்கமாக இம்மூன்றும் வந்தமைகின்றன எனலாம். '**தத்துவம் அஸி**' என்பது மஹாவாக்கியம். இதற்கு விளக்கமாகவே நூல்கள் அனைத்தும் அமைந்துள்ளன. **தத்** என்னும் பதம் பரமாத்மனைக் குறிக்கின்றது. **துவம்** என்னும் பதம் ஜீவாத்மனைக் குறிக்கிறது. **அஸி** என்னும் பதம் பரமாத்மனுக்கும் ஜீவாத்மனுக்கும் உள்ள இணக்கத்தைக் காட்டுகிறது. திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் என்னும் தலைப்பின்கீழ் உள்ள மூன்று பாட்டுகளும் இதே கோட்பாட்டை நிறைவேற்றுகின்றன. முதலாவது பாடல் பரம்பொருளைக்குறிக்கிறது. இரண்டாவது பாடல் ஜீவதத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. என்னென்ன பாங்கில் இவ் இரண்டுக்கு மிடையிலே உள்ள இணக்கத்தை நிலைநாட்டலாம் என்பதைக் கடைசிப்பாட்டு தெளிவுபடுத்துகிறது.

பரம்பொருளின் தத்துவங்களெல்லாம் முதல் பாட்டில் தொடர்ந்து பகரப்படுகின்றன. கடவுள் எங்கே இருக்கின்றார் என்னும் கேள்வி எழலாம். அவர் சொர்க்கத்தில் இருக்கின்றார் என்றும் பரமபதத்தில் வீற்றிருக்கின்றார் என்றும், கயிலாயத்திலோ அல்லது வைகுண்டத்திலோ எழுந்தருளியிருக்கிறார் என்றும் விதவிதமாக சமயங்கள் சாற்றுகின்றன. இப்பிரபஞ்சத்திற்கு அப்பாற் பட்டவர் என்றும் தீர்க்க தரிசிகளுள் ஒரு சிலர் பகர்வர். ஆனால் பரம்பொருளைப்பற்றிய உண்மைதான் என்ன? அது அங்கு இருக்கிறது, இங்கு இருக்கிறது என்று இயம்புவதற்கு இடம் தருவதில்லை. எங்கும் நிறைந்திருப்பது அதுவே. எங்கும் என்கின்ற சொல்லே அதற்குப்

பொருந்ாது. ஏனென்றால் இடத்தில் அடங்குவதன்று அது. ஒரு வள்ளத்தினுள் நீர் இருந்தால் நீரைக்கொள்கிற வள்ளம் பெரியது. கொள்ளப் பெறுகிற நீர் சிறியது எனப்பொருள்படும்; எங்கும் இறைவன் இருக்கிறான் என்றால் இறைவனுக்கு ஆதாரமான வெளி பெரிதாய் விடுகிறது. உண்மையில் வெளி என்பதும் திக்கு அல்லது திசை என்பதும் எல்லாம் இப்பொருளில் அடங்கி விடுகின்றன. பரம்பொருளுக்குப் புறம்பாக வெளி என்பதும் இல்லை. பரம்பொருளையே பெருவெளியாக வைத்துக் கொள்ளலாம். நாம் கிரகிக்கும் வெட்ட வெளியும் அதுவும் ஒன்று என்னும் ஐயம் அடுத்தபடியாக வருகிறது. வெட்ட வெளியை ஜட ஆகாசம் என்பார்கள். அது உணர்வற்றது என்பது அதன் பொருள். ஆனால் இறைவனே சித் ஆகாசம் அல்லது சித் அம்பரம் அவன் அறிவு வெளியாய் இருக்கின்றான். அறிவு பிரகாசமானது. அதன் பிரகாசத்திற்குத் தோற்றமும் மறைவும் இல்லை. அணையா விளக்காக அதுயாண்டும் உளது. அக்காரணத்தை முன்னிட்டே அது பிரகாசமானது என்று சொல்லப்படுகிறது.

பிரகாசமான அறிவு வெளி ஒன்றே ஏனைய பொருள்களையெல்லாம் உள்ளது உள்ளபடி விளக்கவல்லது. இதற்கொருசான்று எடுத்துக் கொள்வோம். சினிமாப்படத்திரை தூவெண்மையாய் இருக்க வேண்டும். கறுப்புத்திரையில்படத்தைக்காட்டமுடியாது. தூவெண்மைபிரகாசத்தின் புறத்தோற்றம். வெள்ளைத்திரையின் மீது எல்லா நிறங்களையும் உள்ளபடி காண்பிக்கலாம். நிறமற்ற இருளையும் உள்ளபடி காட்டுதற்கு வெண்மை நிறம் பயன்படுகிறது. சித் அம்பரம் அல்லது அறிவு வெளி இந்த வெள்ளைத் திரைக்கு ஒப்பானது. பிரபஞ்சம் என்னும் படத்தை அறிவுத்திரை உள்ளபடி விளக்குகிறது. பிரபஞ்சத்திற்கு இத்திரை அப்பாற் பட்டதாகவும் இருக்கிறது. பிரபஞ்சத்தை விளக்குவதால் இந்த ஆத்மப் பிரகாசத்திற்குக் குறை ஒன்றும் வந்துவிடுவதில்லை. தீப்பற்றி எரிவதை சினிமாத்திரை விளக்குகிறது. கொலைபுரிவதையும் அதே திரை விளக்குகிறது. இறைவணக்கம் பண்ணுவதையும் அது காட்டித்தருகிறது. நலம் கேடு ஆகிய இருவிதக் காட்சிகளைக் காட்டித் தருதற்கிடையில் படத்திரை தன்மயமாய் இருக்கிறது. நலம் கேடு ஆகிய இரண்டிலும் அது கட்டுப்பட்டதல்ல. அங்ஙனம் அறிவுத்திரை

அண்டங்கள் அனைத்தும் தன்னகத்து அடக்கிவைத்துக் காட்டு கிறது. அண்டங்களிலுள்ள தன்மைகளுக்கெல்லாம் அது கட்டுப் படாமலும் இருக்கிறது. எங்கும் பிரகாசமாய் இருப்பதன் பொருள் இதுவேயாம்.

அது அறிவு வெளியாய் இருப்பது மட்டுமன்று, தனது அறிவில் அது ஆனந்தமடைகிறது. அறிவு ஓங்க ஓங்க ஆனந்தமும் அதிக ரிக்கிறது. பேரறிவுப் பொருளாகப் பொலியுமிடத்து பேரானந்தமும் அதன்பால் பொலிகிறது. அக்காரணத்தை முன்னிட்டே அது ஆனந்த பூர்த்தியாய் உள்ளது என்று சொல்லப்படுகிறது. ஆக அது ஏக காலத்தில் பேரறிவு சொரூபமாகவும், பேரானந்த சொரூ பமாகவும் இருக்கிறது. அறிவு வேறு ஆனந்தம் வேறு அல்ல. அறிவே ஆனந்தம்; ஆனந்தமே அறிவு. அதற்குமேல் மற்றொரு மகிமை அதனிடத்து இருக்கிறது. அருளொடு நிறைந்திருப்பதே அம்மகிமையாம். பரம்பொருளின் அருள் நிலைக்கு சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். பூமியில் பாலைவனம் என்னும் பகுதி ஒன்று உண்டு. செழிப்பான நிலம் என்னும் பகுதி வேறு உள்ளது. பாலை வனத்தில் விதை விதைத்தால் செடியின் தோற்றம் பொலிவு உறாது. செழிப்பு நிலத்தில் விதைத்த விதையோ ஓங்கி வளர்ந்து தன் இயல் பை எல்லாம் நன்கு விளக்குகிறது. செழிப்பான நிலத்தை அருள் நிறைந்தது எனலாம். கடவுளின் பெருமையே அருள் எனப் பெயர் பெறுகிறது. அண்டங்கள் யாவையும் உயிர்கள்யாவையும் தாங்கி யுள்ள தெய்வம் ஒவ்வொரு பொருளின் தன்மை நன்கு விளங்குவ தற்கான மூலாதாரமாகின்றது. தெய்வ சக்தியைத் துணையாகக் கொண்டு சராசரங்கள் யாவும் தம் இயல்புகளை உள்ளபடி விளக்கு கின்றன. அதற்குத் துணையாக தெய்வம் என்னும் மூலப் பொருள் இருப்பதால் அது அருளொடு நிறைந்தது என்று சொல்லப்படுகிறது. படத்திரை படங்களை யெல்லாம் தன்னகத்து அடக்கிக் காட்டுவது போன்று பரம்பொருள் என்னும் அருள் வெளி அகிலாண்ட கோடி களை யெல்லாம் அடக்கிவைத்து விளக்கிக் காட்டிக் கொண்டி ருக்கிறது.

# நால்வகை யோகம்

(சுவாமி சித்பவானந்தர்)

## கர்ம யோகம்

தாமரை இலையும் தண்ணீரும் நமக்கு கர்மயோகத்தை விளக்குகின்றன, நீர் இல்லாவிட்டால் இலைவளராது, வளர்த்து விட்டதற்காகத் தாமரை இலையைத் தண்ணீர் பற்றிக்கொண்டிருப்பதில்லை. வினைப் பயனால் கிடைத்தவைதான் இந்த உடல், வாழ்வும், சுற்றம்யாவும். நாம் விளைவித்துக்கொண்ட இவற்றில் பற்று வைத்து மயங்கலாகாது. "யானே பொய், என் நெஞ்சும் பொய்" என்றார் மணிவாசகப் பெருமான். உடலுக்கு முக்கியத்வம் கொடுக்கக் கூடாது, எதிலும் பற்று நீங்கிய மனப்பான்மை வேண்டும். சுற்றத்தாரிடம் உரிமை பாராட்டக்கூடாது. மனைவி, மக்கள், சொத்து சுகம் யாவும் இறைவனுக்குத்தான் சொந்தம். இறைவன் நம்மிடம் ஒப்படைத்த சுற்றத்தார்கட்கு நாம் இருக்கும்வரை கடமையைப் புரிந்துவிட்டுச் செல்வதுதான் நம்மைப்பொறுத்ததாகும், ஒரு பணக்கார வீட்டில் வேலைக்கமர்ந்த வேலைக்காரி, தான் அங்கிருக்கும்வரை, தமது எஜமானின் குழந்தைகள், பண்டம் பாத்திரம் யாவற்றையும் சொந்தம் பாராட்டி அன்போடு கவனித்துவிட்டு, அதைவிட்டு விலகும்போது அவற்றில் எவ்விதமான மனப்பற்றுமின்றிச் செல்வதுபோல, நாம் இங்கு வாழும்வரை, உலகப் பொருட்களில் மனம் பற்றாது வாழ வேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள், அடிக்கடி வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதுபோல, மரணத்தின்மூலம் நாம் வெவ்வேறு இடங்களுக்கு—வெவ்வேறு உடல்களுக்கு மாற்றப் படுகிறோம். நமது பற்றை நீக்கவே இறைவன் இப்படிச் செய்கிறான், ஒரு பிறவியில், நாம் எல்லோருடனும் சொந்தம் பாராட்டிக்கொள்ளலாம். ஆனால் பற்று வைக்கக் கூடாது, பற்றுவைப்பதால் தான் துன்பப்படுகிறோம்,

இறைவன் 'கர்ம சொரூபி', 'இயற்கை' என்பது இயங்கும் தன்மையுடையது. அதாவது, கர்ம சொரூபம், நாமும் கருமமின்றி வாழமுடியாது. உண்ணுவது, சுவாசிப்பது, எண்ணுவது. யாவும் கர்ம மயம்! நித்திரையிலும் நமது அந்தக் கரணங்கள் தொழிற்பட்

டுக் கொண்டே யிருக்கின்றன. கர்மத்தை விட்டு நாம் விலக முடியாது. உடல் ஓய்ந்து வீழ்ந்தாலும், உயிர் சும்மா இருக்க முடியாது. பின்னும் வேறோர் உடலில் உயிர் சேர்கிறது. தாமரை யிலையில் நீர் பட்டாலும் அதில் ஒட்டுவதில்லை. அதுபோல் கர்ம மயமே வாழ்க்கை என்றாலும், கர்மம் நமதுஉள்ளத்தில் ஒட்ட இடங்கொடுக்கக்கூடாது. மனைவி, மக்கள், சொத்து சுகங்களில் பற்றுவைத்துக் கொண்டுவாழ்பவர்கள் அனுபவிக்கும் இன்பத்தை விடத் துன்பமே அதிகம். இவற்றில் பற்றின்றி வாழ்பவர்களே நன்றாக, அமைதியான பூரண இன்பவாழ்வு வாழ்கிறார்கள். உலகக்கடமைகளையும் சரிவரச் செய்கிறார்கள். இதைப்பற்றி சந்தேகம் எழலாம், ஆனால். அனுபவத்தில் இதுதான் உண்மை.

"நீரில் படகு மிதக்க வேண்டுமேயன்றி, படகுக்குள் நீர் புகுந்து விடக்கூடாது. அது போல் நீ உலகில் வாழவேண்டும்" என்றுபரமஹம்ஸர் பகர்ந்தருளியுள்ளார்.

சுத்தியால் அடித்துத் தட்டித்தட்டி, குயவன் பானையை வனைகிறான்; கன்னான் பாத்திரம் வனைகிறான். அதுபோல, நமது கர்மம் காலந்தோறும் நம்மை மாற்றிக்கொண்டு வருகிறது. ஓயாது நாம் செய்த வினைப்பயனால், குழந்தை முதல் இன்றுவரையுள்ள மாறுதல்களை அடைந்திருக்கிறோம். கர்மவிளைவின் அளவுக்கு நம்மை நாமே மாற்றிக்கொள்ள முடியும். நாம் விரும்பியவாறு, உயரவும் தாழவும் முடியும். இதற்கு இறைவனருள் உதவும். நமது வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையை இறைவன் அமைத்திருக்கிறார். காற்றின் சூழ்நிலையைஅறிந்து படகைச் செலுத்த வேண்டுவதுபோல, இறைவன் நமக்குஅளித்துள்ள வசதிகளை உணர்ந்து பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நம்மை நாமே மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

இப்பிரபஞ்சப் பள்ளிக்கூடத்தில் கற்றுத்தான் முன்னேறவேண்டும். நல்ல காரியத்தால் நல்ல மாற்றம், தீயகாரியத்தால் தீயமாற்றம் உண்டாகும். உலகவாழ்வில்புரியும் அத்தனைகாரியங்களையும் கடவுட்பணியாகவேசெய்து பழகிவந்தால் துன்பமற்றவாழ்வு நிச்சயம். இதுதான்கர்மயோகம். அடியார்கள் வாழ்வெல்லாம் இப்படிப்பட்டதுதான்.

கடவுளைப் புறக்கணித்தால் வாழ்வு போட்டிமயமாய் விடும். துணைக்கொண்டாலே இன்பமயமாகும். போட்டி இடுவது விலங்கு மனத்தவர் இயல்பு. போட்டியற்ற ஐக்கியத்தின்மூலமே மாந்தர் நல்

வாழ்வு பெறமுடியும். அதற்குமேல் யாகம் என்பது; மனிதருக்கு ஏற்றது. இதில் இறைவனுக்குத்தான் முதலிடம் வேண்டும். சொந்தப் பெருமைக்காக, தக்கன் வேள்வி செய்தான், சிவபெருமானுக்கு அழைப்பில்லை. அழையாவிருந்தாக அம்பிகை சென்றாள். மகளுக்கு அன்பான வரவேற்பில்லை; அவமானத்தால் உடலை உகுத்தாள். 'சிவம்' என்ற மங்கலப்பொருளுக்கு அங்கு இடமில்லாததால், அமங்கலமாகவே யாகம் முடிந்தது, தாமார்க்கும் குடியல்லாத்தன்மையான கோமார்க்கே· யாம் என்றும் மீளா ஆளாய்க் குறுகுவோமானல், கட்டற்ற பேரின்பக் கடலில் கலந்து விடலாம். ஜீவன் குறுகினல் சிவன் ஆகிருன்,

ஆலயத்தில் 'உபயம்' என்று எழுதி வைப்பது தகாது, இறைவன் நமக்கு அளித்த பொருளைத் திருப்பிக் கொடுத்தோம். இதில் யாருக்குப் பெருமை? சமுத்திர அலை சமுத்திரத்திலேயே அடங்கி விடுகிறது, நமதுஅனைத்தும் அவனுடைத்தே.இதைஉணர்ந்து நமது அன்ருடச் செயல்கள் யாவையும் அவனுக்கே அர்ப்பணிக்க வேண்டும், நாம் சுவைக்கும் பொருட்டுஉண்பது சரியல்ல; நம்முள் உறையும் இறைவன் ருசிப்பதற்கே இல்லத்தில் சமைப்பவர்கள் இறைவனுக்காகச்சமைக்க வேண்டும். இயற்கையின் பல்வேறு காட்சிகளைக்கண்டு களிப்பது, ஆலயத்தில் வணங்குவது ஆகிய இவையெல்லாம் எங்கும் அவன் மயமாகக் காண்பதற்குத்தான்!

'யாகம் என்பது தன்னையே இறைவனுக்குக் கொடுத்து விடுவதுதான். இதற்குப் பல ஜென்மம் வேண்டும். நதி தன்னைக் கடலுக்குக் கொடுத்து. கடலாகவே ஆகிவிடுகிறது, அதுபோல்கடவுளிடம் நம்மை நாம் ஒப்படைத்துவிட்டால், நாம்கடவுளாகவே ஆகிறேம்.

நித்திய வாழ்க்கையில் யாகம்:- தனக்குப் பிரியமான பொருளைக் கடவுளுக்குக் கொடுத்துப் பழகுவது, உண்மைப்பக்தன். தன்னைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டுமேயன்றி, கடவுளிடமிருந்து எதையும் கேட்கக் கூடாது. 'நான்' என்பது தேயத் தேயக் கடவுளை நெருங்குகிறேம். உண்மைத் தொண்டர்கள் தன்னைமுற்றும் கொடுத்தே இறைவனைப் பெற்றார்கள்! வினைமயமாய் வாழும் நாம், இறைவன் வழிபாடாகவே அனைத்தையும் அர்ப்பணிப்போமாக

(தொடரும்.)

# திரி கரண சுத்தியோடு தொண்டாற்றத் தியாக சிந்தையர்கள் வேண்டும்.

## சைவநெறி தழைத்தோங்கத் தெய்வப்பணி புரியவாரீர்!

*[காரியதரிசி திருநெறிக்கழகம் கிளிநொச்சி]*

இலங்கையில் சைவமக்களிடையே சமயபக்தி, கலாசாரம், ஒழுக்கவழக்கங்கள் யாவும் சிதைவடைந்துபோயிருப்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவர். பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளைக் கொண்டும், தனிப்பட்டவர்களின் பேச்சு, செயல்களைக் கொண்டும் ஸ்தாபனங்கள் இயங்கும் நடைமுறைகளைக் கொண்டும் இதை அறியலாகும்.

சைவக் கலாசாலைகள், ஆலயங்கள், அறநிலையங்கள் மற்றும் சமய வளர்ச்சிக்குரிய ஸ்தாபனங்கள் பரிபாலிக்கப்படுவதில் பலவித மான ஊழல்கள் மலிந்து இருப்பது கண்கூடு. இதனால் சைவமதத் தினர் பலர் தங்கள் புனிதமதத்தின் உண்மையை அறியாது மதத் தில் நம்பிக்கையை இழப்பதோடல்லாமல் புறமதங்களில் போய்ச் சேருவதையும் நாம் நன்கு காணக்கூடியதாயிருக்கின்றது. அன்னி யர் ஆட்சிக்காலத்தில் நமது மதத்தினர் அநேகர் மதம் மாற்றப்பட் டனர். ஆனால் இன்றும் அங்ஙிலேயிலேயே நம்மவர் மதம் மாற்றப் பட்டு வருவது கண்டும் நாம் வாளாவிருக்கின்றோம். அனாதக் குழந்தைகளின் கல்வியைப் பூர்த்தி செய்வதாகவும், அரசாங்க உத் தியோகங்களுக்காகவும், வறுமையாலும் இம் மதமாற்றம் நடை பெறுவதாக காரணம் கூறப்பட்டுவருகிறது. இன்னோரன்ன குறை களில் அனாதைக் கல்வியுதவி, சரியான மதபோதனை ஆகிய இரண் டையேனும் தற்போதைய சைவஸ்தாபனங்கள் திருப்தியாய்ச் செ ய்து வருகின்றனவா? இல்லை என்ற பதிலைத்தான் எவர்வாயிலி ருந்தும் கேட்கலாம். ஆத்மீகத்துறையில் ஒருகாலும் இலௌகீகத் துறையில் ஒருகாலும் வைத்துக்கொண்டு சமயப்பணிபுரிய முற்படு கிறவர்களால் தற்போதைய சமய ஊழல்களை போக்கவோ குறை களை நிவிர்த்திக்கவோ இலகுவில் சாத்தியமாகாதென்பதை அனுப வத்தில் காணக்கூடியதாயிருக்கின்றது. இவர்கள் பொருளுதவியும்

ஆலோசனைகூறியும் துணைபுரியலாமேயன்றி இவர்களின் குடும்ப விவகாரங்கள் இவர்களைத் தொண்டாற்ற இடங்கொடா. இத் தகையோரால் நடாத்தப்படும் ஸ்தாபனங்களில் விழாக்களையும் வரவேற்புகளையும் செய்து தமக்குச் கீர்த்தியைத் தேடுவதோடு நின்றுவிடுவதேயன்றிச் சாதனையில் வெற்றிகாண்பது அரிதாகவே இருந்து வருகிறது. அது சாத்தியப்படக்கூடியதுமல்ல.

ஆதலால் இருபத்துநான்குமணி நேரமும் சைவப்பணி புரியக் கூடிய சைவத் தொண்டர்கள் கொண்ட ஓர் குழுவினால் மாத்தி ரமே எமது சமயக் குறைபாடுகளை நிவிர்த்திக்க முடியுமென்பதை எவரும் மறுக்க முடியாதென்றே கொள்ளலாம். இன்றளவும் கூட் டங்களும் விழாக்களும் நடாத்தியதுபோதும். பத்திரிகைகளில் சமய வாதங்கள் நடாத்துவதிலும், அபிப்பிராயங்கள் வெளியிடுவதிலும் சமயத்தை வளர்த்துவிட முடியாது. ஆதலால் தம்மைத் தாமே சம யப்பணிக்கு அர்ப்பணித்துச் சமயத் தொண்டாகிய தியாகாக்கினி யில் குதிக்கச் சமயத் தொண்டர்கள் முன்வரவேண்டும், இன்று இலை மறைகாய்போல் பல உண்மைத் தொண்டர்கள் ஆங்காங்கி ருந்து வருகின்றனர். இவர்கள் ஒன்று சேர வேண்டும். கால தாமத மின்றிச் செயலில் இறங்க வேண்டும். இவர்கள் உறவினரின் தொடர் பறுத்துக் குடும்பத்தினின்று விடுபட்டுச் சத்திய நெறியில் செல்லும் பிரமச்சாரிகளாயிருக்கவேண்டும். தனக்கென்று ஒரு தேவையுமற்று நினைப்பு, பேச்சு, செயல், உழைப்புயாவும் சமயவளர்ச்சிக்கே உதவ வேண்டும். இவர்கள் அப்பணிக்குத்தம்மை அர்ப்பணித்தால் மீண்டு தமது உறவினரின் இன்ப துன்பங்களால் பாதிக்கக்கூடியவராயிருக் கக்கூடாது, யாவும் இறைவனுக்கே அர்ப்பணித்து இறைவனிடத் தில் தன்னைப்பூரணமாக ஒப்படைத்து இந்த உடல் உள்ளளவும் சம யப்பணி புரிந்து இறப்பது என்ற திடசங்கற்பமுடையவராயிருக்க வேண்டும். இத்தகைய தொண்டர்கள் ஒன்று சேர்ந்தால் முதலில் தங்கள் உணவு, உடை முதலாய சுயதேவைகளைப் பூர்த்தி செய் வதற்காக அவரவரின் தரத்திற்கேற்ற வகையில் விவசாயத்திலும் கைத்தொழிலிலும் ஈடுபடலாம். ஓய்வுநேரங்களில் சமயசாஸ்திர நூல் பயிலுவதிலும் தன் ஆத்ம நிச்சயம் பெறும் சாதனைகளிலும். பயிற்சி பெறலாம். இத்தொண்டர் குழுவின் வேலைத்திட்டங்கள் நிர்வாகங்களுக்கு நிர்வாகத்தில் அனுபவமுடைய அறிஞர்களின் ஆலோசனையையும் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட அம்சங்கள் உள்ளவர்களை இக்காலத்தில் காண்பதரிது என்றுபலர் எண்ணக்கூடும். ஊர்தோறும்ஒருவரோபல ஊருக்கு ஒருவரோ ஆண்பாலரும் பெண்பாலரும் நிச்சயமாக இருப்பர். மேற்குறிப்பிட்ட உத்தமகுருமாரும் இல்லாமலில்லை. உண்மையில் இப்புனிதகைங்கரியத்திற்காகத் தம்மைத் தியாகஞ் செய்துகொண்டு தொண்டர்கள் ஒன்று சேர்ந்து விட்டால் குருவுங் கிட்டுவார் மற்றும் வேண்டிய வசதிகள்யாவும் கிட்டும், இவ்வுண்மைச் சரித்திரங்களும் அனுபவங்களும் உணர்த்திவருவதைக் கூர்ந்து நோக்குவோர் உணரமுடியும். அன்றி இவ்வித தியாகச் செயலால் இயல்பிலேயே ஓர் மறுமலர்ச்சியை நம் சமயத்தவரிடம் காணலாம், மலிந்து இருக்கும் ஊழல்கள் விலங்குகள் நெகிழத் தொடங்கும்,

இத்தகைய குழுவினர் ஒன்று சேர்ந்து பயிற்சியை ஆரம்பித்தால் ஏறக்குறைய இருவருடங்களில் சேவைக்குரிய தகுதி பெற்றவர்களாகி விடலாம். இவர்கள் ஆலய நிர்வாகம், அநாதைகள் நிலைய பரிபாலனம், சமயப்பிரசாரம். தர்மசொத்துக்கள்பரிபாலித்தல், சமய வளர்ச்சிக்குரிய ஏனைய விஷயங்களில் ஈடுபடுதல் ஆகிய இன்னோரன்ன பணிகளில் நின்று கடமையாற்றலாம், தாம்பற்றின்றிச் செய்யும் சரீர உழைப்பால் மீதியாகும் வருவாய்களைச் சமயவளர்ச்சிக்குரிய நிதியில் சேர்க்கலாம்,

ஆகவே இத்தொண்டர் குழுவில் படித்தவர்களாயினும், படியாதவர்களாயினும், செல்வராயினும் வறியவராயினும் சேரலாம் வேண்டியது சம்பூரண துறவுக்குரிய தியாக சிந்தையும் தூய ஒழுக்கமுமேயாகும்,

இத்தகைய தொண்டர் குழுவில் சேரவிரும்பும் ஆண்களேனும் பெண்களேனும் இக்கழக விலாசத்திற்குத் தமது அபிப்பிராயங்களை எழுதினால் அது பற்றிய நடவடிக்கைகளில் இறங்குவதற்கு உதவியாய் இருக்கும், அன்றிஅறிஞர்களதும், அபிமானிகளதும் ஆலோசனைகள் கிடைத்தால் பணிவுடன் ஏற்று அவற்றைப் பரிசீலனை செய்வதற்கு ஓர் அறிஞர்களின் மகாநாட்டைக் கூட்டிச், செயலில் ஆரம்பிக்க உதவியாய்இருக்கும். இது நிறைவேறத்திருவருள் நின்று துணைபுரிவதாக.

# மனம்.

*ரா. வ.*

முடிவில்லாது எல்லாவற்றிலும் பரவி, ஆத்மாவின் கற்பனைத் திறத்தின் மூலம் வைக்கப்பட்டிருக்கும் அமைப்பைத்தான் ஆத்மா என்றும் "மனம்" என்றும் சொல்கிறோம். இது, பிராணன் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் இருக்கிறது, உணர்வின் உற்பத்தியான மனம்தான் ஆக்கவும், காப்பாற்றவும், அழிக்கவும் வல்லது கற்பனைதான் மனத்தின் முக்கிய குணமாகும். ஒவ்வொன்றையும் முதலில் உணர்ந்து, கற்பனைமூலம் எண்ணி, பிறகுதான் செயல்முறைக்குக் கொண்டுவருகிறது,

உலகின் செயல்முறைகள் பூராவும் மனத்தால் கற்பனைசெய்து உண்டாக்கப்பட்டதாகும், சந்தோஷங்களையும், கஷ்டங்களையும் தானே ஏற்படுத்திக்கொண்டு, இன்பத்தையும், துன்பத்தையும் அடைந்து கொள்ளுகிறது. மனம் எப்பொழுதும் நண்பனாகவே இருந்து விடுவதில்லை, கொடிய விரோதியாகவும் மாறிவிடும். நம்முடலுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறது இந்த மனம், என்று ஏமாந்து விடக்கூடாது, நமக்கு வெளியிலும் தீவிரமான வேகத்துடன் சுற்றி அலைகிறது என்பதை உணர்ந்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், உபதேசம் செய்யும் குருவாகவும் பாவம் புரியும் கொடிய அரக்கனாகவும், ஓரேமனம் இருவேறு உருவம் எடுத்துக்கொண்டு, வேடிக்கைகள் காட்டித்தானே அதைப் பார்ப்பவனாகவும் வேஷம் போட்டுக்கொள்கிறது. இது ஒரு விசித்திரம் அல்லவா?

மனம் ஒரு ரசாயன ஆராய்ச்சி நிபுணன் போன்றது. இந்த ஆராய்ச்சிக்காரன், அதிகமான சாதனங்களுடன் ஆராய்ச்சியை நடத்துவதில்லை, "முக்குணம்" என்ற சாதனத்தை ஒவ்வொரு உடலிலும் பொருத்தி, அதன் தன்மைகளால் ஏற்படும் வர்ணஜாலங்களைக் கண்டு ஆனந்திக்கிறான்.

இத்தகைய கடினமான மனத்தை இருபிரிவுகளாகப்பிரிக்கலாம் ஒன்று தாழ்ந்த மனம்; மற்றொன்று உயர்ந்த மனம், உணவுக்கும், உடைக்கும் எப்படியாவது வழிசெய்துகொள்ளவேண்டும், என்ற தீவிரம் எழும்போது, அறிவுக்குத் திரைபோட்டுவிட்டு, அவனைத்

தாழ்ந்தவனாக உட்கார்த்தி விடுகிறது. இது தாழ்ந்தது. உணவும் உடையும், நமக்காக நாமே ஏற்படுத்திக்கொண்டது; அதற்காகவே நாம் படைக்கப்படவில்லை. எனவே, உணவையும், உடையையும் தவிர, வேறு, தனியானதொரு இலட்சியம் இருக்கிறது. அதைநாம் அடைந்து உண்மை இன்பத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்குடன் பகுத்தறிவைச் செயல்படச் செய்வது உயர்ந்தது.

கடினமான சஞ்சல மனத்தைப்படைத்தவன், அதனுடைய தீயபோக்கைக் கட்டுப்படுத்தப்பகுத்தறிவையும் படைத்திருக்கிறான் கரையற்ற பெரும் கடலும் கரையற்ற ஏரியைப் போலக் கட்டுபட்டிருக்கிறதல்லவா? அதுபோல, அலைபாயும் மனத்தைப் பகுத்தறிவு அடக்கியாள்கிறது.

மனம் ஒரு குதிரை. சாதாரணமானதல்ல; முரடுதான்! அதன் வாயில் ஆசையென்னும் கடிவாளத்தைப் பூட்டி, பிராணன் தன்னைக்காப்பாற்றிக் கொள்ள ஆசைப்படுகிறது முயற்சிக்கிறது. பிராணனின் முயற்சி எவ்வளவுக் கெவ்வளவு துரிதமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கடிவாளம் சுண்டி இழுக்கப் படுகிறது. வேதனைதாங்காமல் பலங்கொண்டமட்டும் முதலில் குதிரை ஓடும். பிறகு முடியவில்லை யென்றால். மேலே இருப்பவனையும். கடிவாளத்தையும்உதறி விட முயற்சி செய்யும். இங்குதான் குதிரையின் முரட்டுச் சுபாவம் நன்குபுரியும். குதிரையை நடத்துபவன். சற்று நிதானித்து, கடிவாளத்தின் பிடியைத் தளர்த்தித் துடிப்பை, இனிமேல் இவ்வளவு வேகத்தில் காட்டக் கூடாது என்ற பிரதிஞ்ஞையுடன் குதிரையை நடத்தினால்தான், போகும் ஊருக்கு எளிதாகப் போய்ச் சேரலாம், இல்லை யெனில் பிராணனுக்கு ஆபத்து நேரிடலாம்.

இதற்குத்தான் நம்முன்னோர்கள் மனத்தைப் பல படிகளாக அடக்கும் வழியை வகுத்துவைத்திருக்கிறார்கள், "பிராணன் என்ற தங்கத்தை மனம் என்ற குவையில் வைத்து அறிவு என்ற நெருப்பில் திணித்து இறையுணர்வு என்ற ஊதுகுழலால் சூடு ஏற்றினால், உருகும், பின் உன் இஷ்டப்படி பலவித ஆபரணங்களாக மாற்றி அணியச்சௌகரியமாக இருக்கும்" என்பனபோன்ற உபமானத்தைத் தத்துவங்களை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாம் உணர்கிறோமா?

# செய்தித் திரட்டு

## நாம லிகித ஜெப யாகம்

இந்தயாகத்தில் பங்குபற்றும் அன்பர்களின் தொகை 4336 ஆக அதிகரித்துள்ளது. 10-11-54 வரை ஆச்சிரமத்திற்கு அனுப்பப்பட்ட நாமங்களின் தொகை 16,27,00,772. கொழும்பில் 12-12-54ல் சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்ற நாமலிகிதத்தில் பல அன்பர்கள் இன்னும் புதிதாகச் சேர்ந்துள்ளார்கள். 30-12-54. காலை 8 மணியளவில் ஆத்மஜோதி நிலையத்தில் நடைபெறப்போகும் நாம லிகித ஜெபயாகத்திலும் புதிய அன்பர்கள் பங்கு பற்றி தொடர்ந்து எழுதிவரலாம்.

## ஸ்ரீலஸ்ரீ நாவலர் திருநாள்

ஷை திருநாள் 15-12-54. புதன் கிழமை இணுவில் சைவமகா ஜனவித்தியாசாலை மண்டபத்தில் அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையாரால் கொண்டாடப்பெற்றது. அத்தருணம் பல அறிஞர்கள் சொற் பெருக்காற்றினர்.

*64-ம் பக்கத் தொடர்ச்சி*

ஒருமதங்கொண்ட யானையை, வாழைமரத்தில் சிறுநூலால் கட்டிப் போடுவது போன்ற முயற்சி எவ்வளவு வியக்கத்தக்கதோ. அது போன்றதுதான் மனத்தை அடக்கும் காரியமும். ஆனால். மிகத்திறமைபெற்ற யானைப்பாகன் சிலசமயம் வெறிகொண்ட யானையைச் சங்கிலியின் உதவியில்லாமற் கூட நிற்கவைத்து விடுவதுண்டு! அது ஏன் என்றால் அவனுடைய அனுபவ பூர்வமான பழக்கம். எவ்வாறு யானையை நிற்கச் செய்யலாம் எனச்சிந்தித்து அதற்கு ஏற்ப வினை செய்து முடிக்கிறான். யானையின் உள்ளமும் பணிந்துவிடுகிறது. அது போலத்தான் மனக்குறளியை அடக்கியாளப் பழக்கம்தான் தேவை.

மனிதன் இறந்தபின் "அவன் நல்லவன், அல்லது கெட்டன்" என்ற இருசொற்கள்தான் நிலைக்கின்றன. இந்ததரத்தை நிர்ணயம் செய்வது மனம் அல்லவா? எனவே, அவனவன் வாழ்க்கையில் செம்மையாக இருக்கவேண்டியது செல்வமல்ல. எல்லாவற்றையும், ஆராய்ந்து பார்த்துத் தீமையை அறவே விலக்கி நன்மையைப்பகிர்ந்து அளித்து, எல்லோரும் இன்புற்று இருக்கும்படிக்கு எண்ணும் மனமும் அதைச் செயலாக்கும் பகுத்தறிவும்தான் செம்மையான செல்வமாகத் திகழவேண்டும். இதை இறைவனிடம் வருந்திப்பெற்றுவிட்டால், அதுதான் மனித இனம் நாகரீகமாக வாழக் கற்றுக் கொண்டுவிட்ட பொன்னுளாகும்.

Regd. at the G, P, O, As a News Paper H, C. 59-500

ஆத்மஜோதி ஆயுள்சந்தா ஆதரவாளர்.
திரு. ஆர். பொன்னையா அவர்கள், கோலாலம்பூர்

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய நூல்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீமத் பகவத் கீதை | 9—00 |
| எதிர்கால இந்தியா | 1-50 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை | 1—15 |
| ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் | 1-00 |
| அறம்வளர்த்த நம்பி | 95 |
| உலகை உய்வித்த உத்தமன் | 95 |
| சுவாமி விவேகானந்தர் | 90 |
| தேவரகசியம் முதலிய கதைகள் | 90 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் | 75 |
| நன்மக்களைப் பெறுதல் | 50 |
| தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம் | 50 |
| ஆத்ம சக்தி | 40 |
| இராவண தத்துவம் | 40 |
| மனிதனது நிஜசொரூபம் | 25 |
| சக்தி தத்துவம் | 25 |
| ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | 20 |
| சூரிய நாராயணன் | 20 |
| சிவதத்துவம் | 20 |
| வர்ணாச்சிரம தர்மம் | 15 |
| கணபதி | 15 |
| முருகக் கடவுள் | 15 |
| விஷ்ணு தத்துவம் | 15 |
| திருக்குறளில் கடவுள் வாழ்த்து | 15 |
| அருள் விருந்து | 15 |
| அன்னை சாரததா தேவியார் | 15 |
| ஸ்ரீ இராமகிருஷ்ண துதி | 07 |

தபாற்செலவு தனி.

**ஆத்மஜோதி நிலையம். ::: நாவலப்பிட்டி.**

Hony. Editor, K. Ramachandran, 60. Deal Place Colpetty.
Printed & Published by N. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
Saravana Press, Nawalapitiya.